தமிழ் இலக்கியக்காரர் வரிசை—எண் 1

# தாயுமானவர்

அவர் சரித்திர சுருக்கமும், பாடல்களின் ஏற்றமும்,

அவற்றினது இலக்கிய ஆராய்ச்சி முதலியன


இது இயற்றியது

ஈ. ந. தணிகாசல முதலியார், பி. ஏ., பி. எல்.

ஹைகோர்ட்டு வக்கீல்.


"கண்டவிட மெல்லாம், கடவுள்மயம் என்றறிந்து [ளோ?"
கொண்டநெஞ்சர் நேயநெஞ்சில் கொண்டிருப்ப தெந்நா

— அன்பர் நெறி


சென்னை

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

1923

[ரிஜிஸ்தர் செய்தது] [விலை அணா 6

THE TATA PRINTING WORKS,
MADRAS—1923

# PREFACE

A **Tamil Men of Letters** series, in the lines of the **Englishmen of letters,** is necessary for our modern requirements. We have many great Tamil scholars and pandits who may be expected to undertake this task. Although critical essays, and research works are not uncommon in our twentieth century literature, a combination of the biography with a critical review of a standard Tamil author from the point of view of a literary critic, has not yet been satisfactorily planned out by any one. Till now the author did not wish to usurp the functions of a literary critic, as his occupation is quite unsuitable for this task. **Tayumanavar** was his hobby from his childhood, in the sense, that it was his "devotional pastime." The various notes which he made from time to time were delivered in the form of a lecture on the 31st December 1922 before the Vedanta Conference at Madras. Many of his friends having requested him to put the lecture in print in a slightly enlarged shape, the author ventures with his pioneer attempt on Tayumanavar, only for the purpose of stirring up enquiry and research in the partly unexplored regions of literary history. Though Tayumanavar is not far removed from us, and his descendants are traceable, it is a shame for us that we cannot get satisfactory materials to construct his biography accurately. If better men than this author will be pleased to come forward to devote their labour of love in bringing out a better and a more detail biography of Tayumanavar, or elaborate criticism of his poems in their different aspects of poetry, ethics and philosophy, bringing forward the light they throw on their contemporary history, and manners, and the part played by Tayumanavar, a social and religious reformer in Southern India, the author will feel grateful to them and consider his labour amply rewarded. Any suggestions as the possible improvements and corrections will be thankfully received by the author, and will be carefully attended to in the next edition.

# புனைந்துரை.

ஆயிரமுகத்தா லகண்டதாயினும் பாயிரமின்றேல் பனுவலன்றெனும், ஆன்றோர் மொழி கடைப்பிடித்து, எம்முகத்தினுமகலா விப்பனுவலுக்கும், நான்முகம் கூறலாயினேன். கர்ணபரம்பரையாய் நாம் பெற்றுள்ள தாயுமானவர் வரலாறு, அவர் பாக்களின்கண் அநுமானிக்கத்தக்க விஷயங்களுக்கு எத்துணை பொருந்துமென்னும் ஆராய்ச்சி தற்காலத்தில் இன்றியமையாதது. இதன்றியும் 17-ம் நூற்றாண்டின் ஈற்றில், நமது நாட்டில் மகம்மதியர், மகாராட்டியர் முதலானோர் கலக்கங்களிடையே, சமரசஞானசித்தாந்தத்தை மனோவாக்குக்காயம் ஒருங்குபட நிலைநிறுத்தி, ஞானவொளி சிறிது பரவச்செய்தது, ஜர்மெனிதேசத்தில், ஹெகல் (Hegel) என்னும் தத்துவசாஸ்திரி, ஜீனா யுத்தகளத்தை ஓர் மாடியினின்று நோக்கிக்கொண்டு வரும் குண்டுகளுக்குச் சலனமாகாது, "உலகம் நிலையற்ற மாயை" யென்னும் நூல் எழுதிய செய்கைக்கு ஒக்கும். இத்தன்மைய தாயுமானவர், கவித்திறமையிலும், கலைஞானங்களிலும், நமது பாஷையிலும், மற்றெந்த பாஷையிலுமுள்ள எக்கவிக்கும் பின்வாங்கியவரல்ல. ஆயினும் நமது நாட்டில் அவரைத் தமிழ்பாவலரும், கம்பராமாயணம், திருக்குறள் வாசிப்பதுபோல் நூல் ஆதியினின்று அந்தம் வரையில் வாசிக்கிறதில்லை. இவ்வெதிர்மறைப்பழக்கம் இனியாகிலும் ஒழிப்பரென இந்நூலையியற்றலாயினேன். இந்நூல் குற்றங்களைவோர், குறைவிலாதவர். அன்னோர் அனுப்பும் பிழைத்திருத்தம் முதலியனவற்றை, சிரமேற்கொண்டு வந்தனமளிக்கும் தங்கள் விதேயன்,

நூலாசிரியன்.

# CONTENTS.


PAGES.

CHAPTER I. The Life of Tayumanavar. ... 1—17

1. His birth and childhood ... ... 1—3
2. His devotional discipleship ... 3—6
3. His marriage and family life ... 7—12
4. His asceticism and salvation ... 13—17

CHAPTER II. Tayumanavar's Learning, worldly experience and character ... 18—35

CHAPTER III. Tayumanavar's Physical constitution, and his out-door activities. 36—43

CHAPTER IV. The peculiarities of his Poetry. 43—54

1. The class of his poetry ... ... 43—47
2. His poetry and the various arts. 47—54
   (*i*) Music, and his aptitude
   (*ii*) Painting, and Sculpture, How their ideals are exhibited in (2) his poems.

CHAPTER V. Literary merits of his Works. 55—71

1. Pugazhendi and Tayumanavar compared ... ... ... 55—57
2. mban and Tayumanavar compared ... ... ... 57—61
3. Tayumanavar and Saiva Metaphysical poets ... ... 61—71

CHAPTER VI. Tayumanavar's Philosophy ... 72—92

1. Philosophical enquiries preceding Tayumanavar in India, summarised 72—74
2. His impartial metaphysical ideas, The peculiarities of his epistemology, and ontology, compared with other theories ... ... ... 74—83
3. Tayumanavar's psychology ... 84—92

## பொருளடக்கம்.

பக்கம்.

I. முதல் அத்தியாயம். ... ... ... 1—17
1. தாயுமானவர் பிறப்பும், அவர் இளமையும் (1—3)
2. ஞானோபதேசம் பெறுதல் ... ... (3—6)
3. திருமணமும் இல்வாழ்க்கையும் ... (7—12)
4. சுவாமிகள் துறவும், முத்திபெற்றமையும் (13—17)
II. இரண்டாம் அத்தியாயம் .... ... 18—35
தாயுமானவர் கல்வியும். உலக அநுபவமும், குணமும்.
III. மூன்றாம் அத்தியாயம் ... .... 36—43
தாயுமானவர் தேகதிடமும், புறத்தொழில்களும்.
IV. நான்காம் அத்தியாயம் .... .... 43—54
தாயுமானவர் கவியின் சிறப்பு. (1) கவியின்பகுதி (43—47)
(2) அவர் கவியும், கலைஞானமும் ... ... (47—54)
(i) இசைஞானம் (ii) உருவஞானம்.
V. ஐந்தாம் அத்தியாயம் ... ... 55—71
தாயுமானவர் பாடல்களின் இலக்கியச்சிறப்பு.
1. புகழேந்தியும், தாயுமானவரும் ... ... (55—5
2. கம்பனும், தாயுமானவரும் ... ... (57—61)
3. தாயுமானவரும், சைவசமயாசிரியர்களும் (61—71)
VI. ஆறாம் அத்தியாயம்
தாயுமானவரும், தத்துவ ஆராய்ச்சியும் ... (72—92)
1. தாயுமானவருக்குமுற்பட்டதத்துவ ஆராய்ச்சி(72-74)
2. தாயுமானவர் சமரசத்தின் சிறப்பு ... (74—83)
3. தாயுமானவரும், மனோசாஸ்திரமும் ... (84—92)



# தாயுமானவர்

## முதல் அத்தியாயம்

### 1. தாயுமானவர் பிறப்பும் அவர் இளமையும்.

திருநாவுக்கரசு சுவாமிகள் பாடலாலும் திருஞான சம்பந்தர் பாடலாலும் முறையே திறக்கப்பட்டும் மூடப் பட்டுமுள்ள கதவுகள் அமைந்த சிவாலய ஸ்தலமாகிய வேதாரண்யம் தாயுமானவர் தந்தை கேடிலியப்பிள்ளை என்பவர் ஊராம். சற்றேறக்குறைய 200 அல்லது 250 வருஷங்களுக்கு முன் இருந்ததாய் கேள்விப்படுகிறோமே யொழிய அவர் எந்த வருஷம் பிறந்தவரென்று நிச்சயமாய்ச் சொல்லத்தக்க சாசன ஆதாரவுகள் நமக்குக் கிடைக்கவில்லை. இவர் குலம் வேளாளகுலம். இவர் பரம்பரையிற் சேர்ந்தோர் இப்போது திருச்சினுப்பள்ளி கோட்டையில் வசிக்கிறார்கள்.

கேடிலியப்பிள்ளை திருமறைக்காடு என்னும் வேதாரணிய சிவாலயத்திற்கு தர்மகர்த்தாவாயிருந்ததால் இவர் கல்வி நற்குணங்களைச் செவியுற்ற திரிச்சினுப்பள்ளி அரசனுகிய விஜய ரகுநாத சொக்கநாத நாயகர் இவருக்கு தனது அரண்மனையில் ஒரு பெரிய வேலை கொடுத்தார். அதனலே கேடிலியப்பிள்ளை குடும்பமானது வேதாரண்யம் விட்டு திருச்சினுப்பள்ளி கோட்டையில் வந்து நிலைக்கலாகி பிறகு அவர் சந்ததியார் நாளது பரியந்திரம் அங்கு குடியிருக்கலானார்கள். இவ்விடத்தில்

மிகவும் கௌரவத்துடன் கேடிலியப்பிள்ளை உத்தியோகம் செய்து வந்தனர். இவர் குமாரன் சிவசிதம்பரம் பிள்ளையை இவர் தன் தமையனுக்கு சுவீகாரம் கொடுத்துவிட்டார். பிறகு கேடிலியப் பிள்ளைக்கு எல்லாச் செல்வமும் இருந்தும் புத்திரபாக்கியம் இன்மையால் அவர் மிகவும் வருந்தினர். சிவபக்தராதலால் அவர் அத்தலத்திலுள்ள தாயுமான ஈஸ்வரரை வேண்ட, அவர் மனைவியார் வயறு வாய்ந்து ஒரு ஆண்பிள்ளையைப் பெற்றார். தாய் தந்தையர் மிகவும் களித்தனர். தாயுமான ஈஸ்வரர் அருட்பிரசாதத்தால் பிறந்த இக்குழந்தைக்கு அத்தலத்துச் சுவாமியின் பெயரிடலாயிற்று.

தாயுமானவர் சிறுவயதில் தமிழ், வடமொழி இவ்விரண்டு பாஷைகளும் கசடறக் கற்றார்.* உலக நடவடிக்கையின் கீர்த்திவாய்ந்து யாவருக்கும் பயன்படத்தக்க நற்குணங்களாகிய, பொறுமை, அன்பு, அடக்கம், ஈகை,

---

*கல்லாத பேர்களே நல்லவர்க ணல்லவர்கள்
கற்றுமறி வில்லாதவென்
கர்மத்தை யென்சொல்கேன் மதியையென் சொல்லுகேன்
கைவல்ய ஞானநீதி
நல்லோ ருரைக்கிலோர் கர்மமுக் கியமென்று
நாட்டுவேன் கர்மமொருவன்
நாட்டினு லோபழைய ஞானமுக் கியமென்று
நவிலுவேன் வடமொழியிலே
வல்லானொ ருத்தன்வர வுந்திரா விடத்திலே
வந்ததா விவகரிப்பேன்
வல்லதமி ழறிஞர்வரி னங்ஙனே வடமொழியில்
வசனங்கள் சிறிதுபுகல்வேன்
வெல்லாம லெவரையு மருட்டிவிட வகைவந்த
வித்தையென் முத்திதருமோ?
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே.

உண்மை முதலானவை இவர் தேகத்துடன் வளர்ந்து வந்தன. ஞானம் நிறைந்த நாளிலும் கருமம்* அநுவசியமென்று கைவிட்டவரல்ல. இங்ஙனம் யாவர் மனதையும் கவர்ந்து களிப்புக்கு நாளில்

## 2. ஞானோபதேசம்பெறுதல்.

தாயுமானவர் உலோகாயதம்† நாஸ்திகம்‡ முத

---

*கொல்லாமை யெத்தனை குணக்கேட்டை நீக்குமக்
குணமொன்று மொன்றிலேன்பால்
கோபமெத் தனைபக்ஷ பாதமெத் தனைவன்கு
ணங்களெத் தனைகொடியபாழ்ங்
கல்லாமை யெத்தனைய கந்தையெத் தனைமனக்
கள்ளமெத் தனையுள்ளசற்
காரியஞ் சொல்லிடினு மறியாமை யெத்தனைக
திக்கென்ற மைத்தவருளில்
சொல்லாமை யெத்தனைவிர் தாகோஷ்டி யென்னிலோ
செல்வமெத் தனைமுயர்ச்சி
சிந்தையெத் தனைசலன மிந்த்ரஜா லம்போன்ற
தேகத்தில் வாஞ்சைமுதலா
அல்லாமை யெத்தனைய மைத்தனையு னக்கடிமை
யானெனி வைக்குமாளோ?
அண்டபகி ரண்டமும் டங்கவொரு நிறைவாகி
யானந்த மானபரமே.

†மின்னனைய பொய்யுடலை நிலையென்று மையிலகு
விழிகொண்டு மையல்பூட்டும்
மின்னார்க ளின்பமே மெய்யென்றும், வளர்மாட
மேல்வீடு சொர்க்கமென்றும்,
பொன்னையழி யாதுவளர் பொருளென்று போற்றியிப்
பொய்வேட மிகுதிகாட்டிப்
பொறையறிவு துறவீத லாதிநற் குணமெலாம்
போக்கிலே போகவிட்டுத்
தன்னிகரி லோபாதி பாழ்ம்பேய் பிடித்திடத்
தாணிமிசை லோகாயதன்
சமயநடை சாராமல் வேதாந்த சித்தாந்த
சமரசநி வாணுபூதி

லான நூற்களின் நுட்பங்களையும் வைணவம்* முதலிய பல சமய கொள்கைகளையும் ஒருதலைப் பட்சமின்றி செவ்வனே ஆராய்ச்சி செய்யலாயினர். கருணாநிதியாய் சச்சிதானந்த லட்சணத்துடன் விளங்கும் மனவாக்கெட்டாக் கடவுள் சொரூபத்தைப் பற்றி பலவகை மதத்தினர் தந்தஞ் சித்தாந்தமே சரியென வாதிப்பது† இவருக்கு நகைப்பு உண்டாக்கலாயிற்று. பிறகு சைவ சித்தாந்தத்திலும் சங்கரமதமான அத்வைத சித்தாந்தத்திலும் தர்க்க ரூபமாய் ஆராய்ச்சி செய்யலாயினர். ஊழ்வினைப் பயனென ஆங்கு மௌனதேசிகர் என்னும் திருமூலநாயனார் மரபின் வந்த ஒரு மஹாத்மா அவரைச் சந்

---

மன்னவொரு சொற்கொண் டெனைத்தடுத் தாண்டன்பின்
வாழ்வித்த ஞானகுருவே!
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌனகுருவே!

‡ இல்லையென் றிடினிப்பூமி யிருந்தவா றிருப்போமென்னில்
நல்லவன் சாருவாகன் நான்சொல்லு நெறிக்கு வீணில்
தொல்லையே னாகமாதி தொடுப்பதேன்? மயக்கமேயிங்
கொல்லைவந் திருமினென்ன வுறவுசெய் திடுவ னந்தோ!

* அல்லலாந் தொழில்ப டைத்தே யடிக்கடி யுருவெ டுத்தே,
மல்லன்மா ஞாலங் காக்க வருபவர் கடவுளென்னில்
தொல்லையாம் பிறவி வேலை தொலைந்திடா திருணீங் காது
நல்லது மாயை தானும் நாமெனை வந்து நிற்கும்.

" அங்கிங்கெனாதபடி " என்னும் பாடலை நோக்குக.

† ஆதியந்த மெனுமெழுவா யீறற் றோங்கி
யருமறையின் னழுங்காணு தாற்ற, நாளு
பேதமதங் களுமலைய, மலைபோல் வாதப்
பெற்றியரும் வாயவாதப் பேய ராகச்
சாதகயோ னத்திலென்ன வடவா னீழல்
தண்ணருட்சந் திரவொளி தடக்கைச் சேர்க
வேதகசின் மாத்திரமாய், எம்ம னோர்க்கும்
வெளியாக வந்தவொன்றே! விமல வாழ்வே!

திக்கலாயிற்று. நாம் கற்ற கல்வி *யாவும் உடலுக்காதலால் அது மெய்யான கல்வி அல்லவென்று உயிரைக் குறித்தகல்வி எதுவென்றெடுத்துக்காட்டும் அந்த ஞான சற்குரு பாதம் பணியப்பெற்ற தாயுமானவர் வேதாந்த சாரம் யாவும் உள்ளங்கை நெல்லிக் கனியெனக் கண்டறிந்தனர்† அவ்வாறு மௌனகுருவிடம் ஞானோபதேசம் பெற்று சுருதி முடிவின் பொருளை அநுபவித்து ஆநந்திக்கலானார். இதையே ஆநந்தக்களிப்பில் "வந்த வரவை மறந்து—மிக்க, மாதர் பொன் பூமி மயக்கத்திலாழும், இந்த மயக்கை யறுக்க—எனக், கெந்தை மெய்ஞ்ஞான வெழில்வாள் கொடுத்தான்" என்று குறித்துள்ளார்.

---

*நில்லாதே யாக்கைநிலை யன்றெனவே கண்டாய்!
நேயவருண் மெய்யன்றோ? நிலயமதாய் நிற்கக்
கல்லாதே யேன்படித்தாய்? கற்றதெல்லாம் மூடம்.
கற்றதெல்லாம் மூடமென்றே கண்டனையு மன்று.
சொல்லாலே பயனில்லை. சொன்முடிவைத் தானே
தொடர்ந்துபிடி. மற்கடம்போற் றொட்டதுபற் றுநில்.
எல்லாரு மறிந்திடவே வாய்ப்பறை கொண்டடிநீ
யிராபபகலில் லாவிடமே யெமக்கிடமென் றறிந்தே.

†(1) "கையிலாம லகக்கனி போன்றவென்,
ஐயனே யெனையாளுடை யண்ணலே".

(2) காணரிய வல்லவெல்லாம் தானே கட்டுக்
கட்டாக விளையுமதைக் கட்டோ டேதான்
வீணினிற்கற் பூரமலைப் படுதீப் பட்ட
விந்தையெனக் காணவொரு விவேகம் காட்ட,
ஊணுறக்க மின்பதுன்பம் பேரூ ராதி
ஒவ்விடவும் எனைப்போல உருவம் காட்டிக்
கோணறவோர் மான்காட்டி மானை யீர்க்கும்
கொள்கையென வருண்மௌன குருவாய் வந்து;

வந்தெனுடல் பொருளாவி மூன்றுந் தன்கை
வசமெனவே யத்துவா மார்க்க நோக்கி,
ஐந்துபுல னைம்பூதங் காண மாதி
யடுத்தகுண மத்தனையு மல்லை யல்லை

இன்னோனேபதேசம் சுவாமிகள் விவாகத்திற்கு பிற்பட்டதென அனுமானிக்கத்தக்க அத்தாட்சிகள் அவர் பாக்களில் பலஉள*

இந்தவுட லறிவறியா மையுநீ யல்லை
யாதொன்று பற்றினத னியல்பாய் நின்று
பந்தமறும் பளிங்கனைய சித்து நீயுன்
பக்குவங்கண் டறிவிக்கும் பான்மை யேயாம்.

அறிவாகி யானந்த மயமா யென்று
மழியாத நிலையாகி யாதின் பாலும்
பிறியாமற் றண்ணருளே கோயி லான
பெரியபரம பதியதனைப் பெறவே வேண்டின்
நெறியாகக் கூறுவன்கே ளெந்த நாளு
நிர்க்குணமிற் குலம்வாய்ந்து நீடு வாழ்க
செறிவான வறியாமை யெல்லா நீங்கச்
சிற்சுகம்பெற் றிடுகபந்தம் தீர்க வென்றே,

பந்தமறு மெய்ஞ்ஞான மான மோனப்
பண்பொன்றை யருளியந்தப் பண்புக் கேதான்
சிந்தையில்லை நானென்னும் பான்மை யில்லை
தேசமில்லை காலமில்லை திக்கு மில்லை
தொந்தமில்லை நீக்கமில்லை பிரிவு மில்லை
சொல்லுமில்லை யிராப்பகலாந் தோற்ற மில்லை
அந்தமில்லை ஆதியில்லை நடுவு மில்லை
அகமுமில்லை புறமுமில்லை யனைத்து மில்லை;

இல்லையில்லை யென்னின்றொன்று மில்லா தல்ல
இயல்பாகி, என்றுமுள்ள இயற்கை யாகிச்
சொல்லரிய தன்மையதா யான்றொ னென்னத்
தோன்றுமெல் லாம்விழுங்கும் சொரூப மாகி,
அல்லையுண்ட பகல்போல அவித்தை யெல்லாம்
அடையவுண்டு, தடையறவுன் னறிவைத் தானே
வெல்லவுண்டிங் குன்னையுந்தா னாகக் கொண்டு
வேதகமாய்ப் பேசாமை விளக்கும் தானே.

* "மௌனகுருவணக்கம்" என்பதைநோக்குக. இதன்றியும் "தந்தைதாய் மகவுமனை வாழ்கை யாக்கை, சுகமனைத்தும் மௌனியருள் தழைத்தபோதே, இந்திரஜா லங்கனவு கானல் நீராய், இருந்ததுவே இவ்வியற்கை" என்பதையும் ஆராய்க.

## திருமணமும் இல்வாழ்க்கையும்.

தாயுமானவர் யௌவனதிசை யடைந்தபோது அவர் தந்தை கேடிலியப்பிள்ளை சிவபதமடைந்தனர். தன்னிடம் உத்தியோகம் செய்த பிள்ளையவர்களுக்கு ஒரு சற்புத்திரன் உண்டென்றும் அவர் கல்விமானென்றும் அரசனுக்கு தெரிந்திருக்கலாம். ஆயினும் "அரசன் வேண்டுகோளால்'' தனது தந்தை தொழிலை ஏற்றுக்கொண்டாரென்ற ஒரு கர்ணபரம்பரை வதந்தி மெய்யென்று நிச்சயிக்கக் கூடவில்லை. தந்தை இறந்த பின் ஜீவனோபாயத்திற்குப் பட்ட கஷ்டங்களின் பிரதி பிம்பமான அவரது சில பாடல்களை* நாம் உற்றுநோக்கும் காலத்தில், இவர் தந்தை காலஞ்சென்றதும் அரசன் தமை உடனே கிடை

---

*(i) மிடியிட்ட வாழ்க்கையா லுப்பிட்ட கலமெனவு
மெய்மெலா முள்ளு டைந்து,
வீறிட்ட செல்வர்தந் தலைவாயில் வாசமாய்
வேதனைக ளுறவேத னும்
துடியிட்ட வெவ்வினையை யேவினுன் பாவினுன்
தொடரிட்ட தொழில்க ளெல்லாம்
துண்டிட்ட சாண்தும்பி யின்பொருட் டாயதுன்
தொண்டர்பணி செய்வ தென்றோ?
அடியிட்ட செந்தமிழி னருமையிட் டாருரி
லரிவையோர் பாகவை வாயில்
அம்மட்டு மடியிட்டு நடைநடந் தருளடிக
ளடியீது முடியீ தென
வடியிட்ட மறைபேசு பச்சிளங் கிள்ளையே!
வளமருவு தேவை யரசே!
வரைராஜ னுக்கிருகண் மணியாயு தித்தமலை
வளர்காத லிப்பெண் ணுமையே!

(ii) எண்ணாத எண்ணமெலாம் எண்ணியெண்ணி யேழைநெஞ்
புண்ணாகச் செய்ததினி போதும் பராபரமே. [சம்

த்ததெனக் கூறுவது அசாத்தியமான காரியம். தந்தைக்குப் பின் வரும்படி குறைந்து கஷ்டப்பட்டே யிருக்கலாம். பிறகு இவர் பெருமை கண்டு இவர் கஷ்டகாலம் நீங்கிய பின்னர் அரசனும் *கைதூக்கியிருக்கலாம். பிரமவித்தாய் விளங்கிய இவருக்கு இல்லற சுகதுக்கங்கள்† ஒன்றாய் காணப்பட்டனவேயன்றி வேறில்லை‡.

இப்படிச் சிலநாள் கழிந்தன. இக்காலத்திலேயே "பரிபூரணானந்தம்"§ முதலிய பாடல்கள் எழுதப்பட்டனவென அநுமானிக்கலாம். இப்பாடல்களில் சம்பந்த

---

*வாராதெ லாமொழிய வருவனவெ லாமெய்த
மனதுசாட் சியதாகவே
மருவநிலை தந்ததும், வேதாந்த சித்தாந்த
மரபுசம ரசமாகவே
பூராய மாயுணர ஆகமது தந்ததும்,
பொய்யுடலை நிலையன்றெனப்
போதநெறி தந்ததும், சாசுவத வானந்த
போகமே வீடென்னவே
நீராள மாயுருக வுள்ளன்பு தந்ததும்,
நின்னரு ளின்னு மின்னும்,
நின்னையே துணையென்ற வென்னையே காக்கவொரு
நினைவுசற் றுண்டாகிலோ
பாராதி யறியாத மோனமே யிடைவிடாப்
பற்றாக நிற்கவருளாய்,
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே.

† (i) சிற்றின்ப மூண்டுழ் சிதையவனந் தங்கடல்போல்
முற்றின்ப வெள்ளமெமை மூடுநா ளென்றுளோ?
(ii) புண்ணியபா வங்கள் பொருந்தாமெய் யன்பரெல்லா
நண்ணியபே ரின்பசுக நாமணைவ தென்றுளோ?

‡"விருப்பு வெறுப்பினை வேரறப் பறித்துக்
கருப்புகா தென்னைக் காத்தருள் செய்தோன்"
—அருளையர் தாயுமானவரைத் துதித்த அகவல்—

§ "சின்மயானந்த குரு," "பொன்னைமாதரை" யென்னும் 78 கலிவிருத்தங்கள், "கல்லாலின்," "பராபரக்கண்ணி"

மூர்த்தி சுவாமிகள்போல் சிற்றின்பம் கண்டறியாத பால்யஞானியாய் காணப்படுகின்றார்.

தாயுமானவர், விஜயரகுநாத சொக்கலிங்க நாயகர் காலஞ் சென்றபின் திரிசிராப்பள்ளி விட்டு ராமநாதபுரம் சென்றனர். இதற்குக் காரணம் இறந்துபோன அரசன் மனைவி இவரைக்கண்டு மோகித்தாளென்றும், அவளது எண்ணத்திற்கு தாயுமானவர் உடன்படாமையால் ஊரை விட்டுத் தாம் ஓடலாயிற்றென்றும் தெரியவருகிறது. அவர் பாடல்களைப் பார்க்கும்போதும் பலவித கஷ்டங்கள்* அநுபவித்தவராய்த்தான் தெரியவருகிறது. இன்னணம் ராமநாதபுரத்திற் சென்ற அம்மகானுக்கு கால் விலங் கிடுவதும்போல் சமுசாரத்தில் நிலைப்படுத்த எண்ணங்கொண்ட இவர் சகோதரர் சிவசிதம்பரம் பிள்ளையும்

---

* (i) சிவன்செய லாலே யாதும்
வருமெனத் தேறேன் நாளும்
அவம்தரு நினைவை யெல்லாம்
அகற்றிலேன். ஆசை வெள்ளம்
கவர்ந்துகொண் டிழுப்பு வந்தக்
கட்டிலே அகப்பட் டைடயோ
பவந்தனை யீட்டி யீட்டிப்
பதைக்கின்றேன் பாவி யேனே !

(ii) ஆசையெனும் பெருங்காற்றூ டிலவம்பஞ்
செனவுமன தலையுங் காலம்
மோசம்வரும், இதனாலே கற்றதுங்கேட்
டதுந் தூர்ந்து முத்திக் கான
நேசமுநல் வாசமும்போய் புலனாயிற்
கொடுமைபற்றி நிற்ப ரந்தோ !
தேசுபழுத் தருள்பழுத்த பராபரமே
நிராசையின்றேல் தெய்வ முண்டோ ?

இவர் சிறிய தாயார் குமாரனை அருளையப் பிள்ளையும் ராமநாதபுரம் சென்று மணவினை முடிக்கவேண்டுமென்றும், அப்படிச் செய்யாவிட்டால் கேடிலியப்பிள்ளை சந்ததியற்றுவிடுமென்றும் தாயுமானவருடன் கூற அதற்கு அவர் *உடன்பட்டனர். பிறகு விவாகம் தாயுமானவருக்கு நடத்தப்பட்டது. இவர் மனைவியின் பெயரும், அவர் ஊரும், தாய்தந்தைகள் பெயரும் இன்னவெனக் காட்டும் ஆதாரவுகள் ஒன்றும் கிடைக்கவில்லை. தாயுமானவர் விவாகத்திற்கு சந்தோஷத்துடன் உடன்பட்டவரல்லர்† எனினும் இவர் மகத்துவம் அறிந்து பூசிக்கும் தேவியே இவருக்கு வாய்த்திருக்கலாம் ‡ இவரும் தாய்தந்தையரிடத்து அன்புபாராட்டியதுபோல் மனைவியையும் பாராட்டியே இருப்பார். கற்புறு சிந்தை மாதை மணந்ததால் இல்லறம் அவர் இனிது நடாத்தினர். இவர்

---

* உண்டுடுத்துப் பூண்டிங்கு உலகத்தோர் போல்திரியும்
தொண்டர் விளையாட்டே சுகம்காண் பராபரமே.''

†(i) நடத்தியிவ் வுலகை யெல்லாம் நாதநீ நிறைந்த தன்மை
திடத்துட னறிந்தா னந்தத் தெள்ளமு தருந்தி டாதே,
விடத்திர ளனைய காம வேட்கையி லழுந்தி மாயைச்
சடத்தினை மெய்யென் றெண்ணி தளரவோ தனியனேனே?

(ii) தனிவளர் பொருளே! மாறாத் தண்ணருங் கருணை பூத்த
இனியகற் பகமே! முக்க ணெந்தையே! நினக்கன் பின்றி
நனிபெருங் குடிலங் காட்டும் நயனவேற் கரிய கூந்தல்
வனிதையர் மயக்கி லாழ்ந்து வருந்தவோ வம்ப னேனே?

‡ '' வைத்திடுங்கா லைப்பிடித்து, கண்ணில், மார்பில்
வைத்தணைத்துக் கொண்டு, கையால் வளைத்துக் கட்டிச்
சித்தமிசை புகவிருத்திப் பிடித்துக் கொண்டு,
தியக்கமற இன்பசுகம் சேர்வ தென்றோ''?

என்பதின் போக்கை நோக்குக.

இல்லறவாழ்க்கை யாதொரு குறைவுமின்றி ஈடேறி வந்தது.*

சுவாமிகள் தேவியார் ஒரு ஆண்குழந்தை பெற்று

---

* (i) பதியுண்டு நிதியுண்டு புத்திரர்கள் மித்திரர்கள்
பக்கமுண் டெக்கால மும்
பவிசுண்டு தவிசுண்டு திட்டாந்த மாகயம
படரொனுந் திமிர மணுகாக்
கதியுண்டு ஞானமாங் கதிருண்டு சதுருண்டு
காயசித் திகளு முண்டு
கலையுண்ட கண்டர்பா லம்மைநின் னருளிற்க
ருத்தென்று முண்டாகு மேல்
நதியுண்ட கடலெனச் சமயத்தை யுண்டபர
ஞானவா நந்த வொளியே
நாதாந்த ரூபமே வேதாந்த மோனமே
நாயினே னகந்தை தீர்த்தென்
மதியுண்ட மதியான மதிவதன வல்லியே!
மதுசூத னன்தங்கை யே!
வரைராஜ னுக்கிருகண் மணியாயு தித்தமலை
வளர்காத லிப்பெண்உமை யே!

(ii) தினமே செலச்செல வாழ்நாளு நீங்கச்
செகத்திருள் சொற்
பனமே யெனவெறி கண்டே
யிருக்கவும் பாசபந்த
வினமே துணையென் றிருந்தோ நமன்வரி
னென்செய்குவோ
மனமேநம் போலவுண் டோசுத்த மூடரிவ்
வையகத்தே.

காதி லோலையை வரைந்துமேற் குமிழையுங்
கறுவிவேள் கருநீலப்
போது போன்றிடும் கண்ணியர் மயக்கிலெப்
போதுமே தளராமல்
மாது காதலி பங்கனை யபங்கனை
மாடமா ளிகைசூழும்
சேது மேவிய ராமநா யகன்றனைச்
சிந்தைசெய் மடநெஞ்சே.

சாயுச்சிய பதவியடைந்தனர்* அப் பிள்ளைக்கு கனகசபா பதி என்று நாமகரணம் செய்து சுவாமிகள் அப்போதே சன்னியாசியானார் என்று சிலர் கூறுவார். ஆனால் அவர் பாடல்களும்† அவர் மாணாக்கரான அருளையர் பாடிய அருள் வாக்கிய அகவலும்‡ அவ் வபிப்பிராயத்திற்கு முரணாயிருக்கின்றன.

---

*பெற்றவட்கே தெரியுமந்த வருத்தம் பிள்ளை
பெறாப்பேதை யறிவாளோ? பேரா னந்தம்
உற்றவர்க்கே கண்ணீர்க்கம் பலையுண் டாகும்.
உறாதவரே கன்னெஞ்ச முடையோ ராவார்.

†(i) கூறுகின்ற விடார்க்கவலை குடும்பக் கூத்துட் டுளைந்துதடு
மாறநின்ற பாவியைநீ வாவென் றழைத்த லாகாதோ?
நீறார்மேனி முக்கணுடை நிமலா வடியார் நினைவினிலை
ஆறாய்ப்பெருகும் பெருங்கருணை அரசே யென்னை யாள் [வானே!

(ii) சாட்டையிற் பம்பர சாலம் போலெலாம்
ஆட்டுவா னிறையென வறிந்து நெஞ்சமே
தேட்டமொன் றறவருட் செயலி னிற்றியேல்
வீட்டறம் துறவறம் இரண்டும் மேன்மையே.

‡'இல்லறத் திருந்து மிதய மடக்கிய
வல்லவன் றானே மகாயோகி யென்றோன்'—அருளையர்

உடலைப் பழித்திங் குணவுங் கோடாமல்
விடவிட வே நாடுவரோ மெய்யைப்—படபடென
வேண்டுவே னிந்தவுடல் மெய்யுணராப் பொய்யனேன்
ஆண்டநீ தானே யறி.

பின்னும் முடற்சுமையைப் பேசும் வழக்கதனால்
என்னபலன் நாமுற் றிருந்தோமே—அன்னதனால்
ஆநந்தம் தானேதான் ஆகுமெம் மையனே
ஏனிந்தத் துன்ப மினி?

## 4. சுவாமிகள் துறவும் முத்திபெற்றமையும்.

அருளைய ரகவலாலும் சுவாமிகள் பாடலாலும் அவர் துறவு எதன்பாற்பட்டதென்று சற்று ஆராய்வோமாக:

இவர் துறவு கஷாயம்பூண்டு மான்தோல்* புலித்தோல் முதலியன அழகாக வைத்துக்கொண்டு கையிலும் காலிலும் நகங்களை வளர்த்துக்கொண்டு மலைக்குகைகளில் வசித்துக்கொண்டு வெளிவேடம் பூரணமாய் நிறையப் பெற்று பாமரசனங்களை ஏமாற்றும் துறவல்ல. இம் மாதிரியான "கள்ளமனத்துறவு" பூணாமல் இவர் எல்லாம் "துறந்ததுறவோர்". அத்தகைய துறவு இவருக்கு ஒரு

---

* பொற்பினொடு கைகாலில் வள்ளுகிர் படைத்தலால்,
பேரந்திடை யொடுக்கமுற லால்,
பொலிவான வெண்ணீறு பூசியே யருள்கொண்டு
பூரித்த வெண்ணீர்மை யால்,
எற்பட விளங்குகக னத்திலிமை யாவிழி
யிசைந்துமே னேக்கமுற லால்,
இரவுபக லிருளான கனதந்தி படதூறி
யிதயங்க ளித்திடுத லால்,
பற்பல விதங்கொண்ட புலிகலையி னுரியது
படைத்துப் பிரதாப முறலால்,
பனிவெயில்கள் புகுதாம னெடியவான் றொடர்நெடிய
பருமர வனங்களா ரும்
வெற்பினிடை யுறைதலாற், றவராஜ சிங்கமென
மிக்கோ நுமைப்புகழ்வர் காண் !
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கண மே.

நாளில் வந்ததல்ல. போலிச் சன்னியாசிகள் பேரில் இவருக்கு வெறுப்பு* அதிகம். வெளிக்கு துறவு காட்டாமலே† மேலான துறவறம் அந்தரங்கத்தில் பெற்றிருந்தனர்.‡ இத்தகைமையான துறவியாதலால் அவர்

---

* மாறுபடு தர்க்கம்தொடுக்கவறி வார்சாண்
வயிற்றின்பொருட்டதாக,
மண்டலமும் விண்டலமு மொன்றாகி மனதுழல
மாலாகி நிற்க வறிவார்;
வேறுபடு வேடங்கள் கொள்ளவறி வாரொன்றை
மொணமொணென் றகம்வேறதாம்,
வித்தையறி வாரெமைப் போலவே சந்தைபோல்
மெய்ந்நூல்வி ரிக்கவறிவார்;
சீறுபுலி போற்சீறி மூச்சைப்பி டித்துவிழி
செக்கச் சிவக்கவறிவார்;
திரமென்று தந்தம் மதத்தையே தாமதச்
செய்கைகொடு முளறவறிவார்;
ஆறுசம யங்கடொறும் வேறுவே றாகிவிளை
யாடுமுனை யாவரறிவார்?
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மானபரமே!

† உண்டோநீ படைத்தவுயிர்த் திரளிலென் போல்
ஒருபாவி தேகாதி யுலகம்பொய்யாக்
கண்டேயு மெள்ளளவு துறவு மின்றிக்
காசினிக்குள் அலைந்தவரார்? காட்டாய் தேவே!

‡ கருமருவு குகையனைய காயத்தி னடுவுட்க
ளிம்புதோய் செம்பனைய யான்
காண்டக விருக்கநீ ஞானவனல் மூட்டியே
கனிவுபெற வுள்ளுருக் கி
பருவமதறிந்துநின் னருளான குளிகைகொடு
பரிசித்து வேதிசெய் து
பத்துமாற் றுத்தங்க மாக்கியே பணிகொண்ட
பட்சத்தை யென்சொல்லு கேன்

அருமை பெருமை* யறிந்த அவர் பந்து மித்திரர்களே அவருக்கு அடியர் குழாமா யிருந்தமையால் அவர் எவ் வயதில் காலஞ்சென்றார், எவ்வருஷம், எம்மாதம், எந் நட்சத்திரம், எவ்வாரம் என்று எழுத்துமூலமான குறிப் புகள் பின்னோர்க்காகும்வண்ணம் செய்யாமற் போயினர். தாயுமானவர்பேரில் அருள்வாக்கிய அகவல் பாடிய அரு ளையர் அவர் சிறியதாயார் புதல்வனென முன்னமே கூறி யுள்ளோம். அவரே இவருடைய முதன்மாணாக்கர். சுவாமி களிடம் இவர் பெற்ற தத்துவ உபதேசத்தை சுவாமி கள் குமாரனான கனகசபைப்பிள்ளை யவர்களுக்கு இவர் உபதேசித்ததாக வதந்தி. அது உண்மையாயின் சுவாமி கள் முத்தியடைந்த ஞான்றில் கனகசபைப்பிள்ளை மிக வும் சிறுவயதா யிருந்திருப்பாரென்று அநுமானிக்கலாம்.

தாயுமானவர் ராமேஸ்வரம் முதலிய ஸ்தலங்களைத் தரி சித் திருந்தாராயினும் நமது தேசத்திய சிவஸ்தலங்களைச்

---

அருமைபெறு புகழ்பெற்ற வேதாந்த சித்தாந்த
மாதியா மந்தமீதும்,
அத்துவித நிலையார வென்னையாண் டென்னடிமை
யானவர்க ளறிவினூடும்
திருமருவு கல்லால டிக்கீழும் வளர்கின்ற
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தட்சணா மூர்த்தியே
சின்மயானந்த குருவே.

* பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்
ஆருந் துறக்கை யரிதரிது—நேரே [போல்
மனத்துறவும் அப்படியே மாணா விவற்றில்
உனக்கிசைந்த வாறென்றே யோர்.

சுற்றி வருவதே* தொழிலாய் வைத்துக்கொண்ட தாய்க் காணோம். தம்மனைவியர் மரித்தபின்னர் தமது இல்லத்தை பூரணமாய் நீத்தாரெனச் சாதிக்கலாகாது. கன்மநெறி தப்பினவர்க்கு கடுநரகுண்டென்பது இவர் கோட்பாடு. ஆகையால் உலகத்தோர் யாரும் பழிக்கக் கூடாத நடக்கையுடன் சிவாநுபவத்தி லிருந்தனர்.†

---

*பத்திநெறி நிலைநின்று நவகண்ட பூமிப்
பரப்பைவல மாகவந் தும்
பரவையிடை மூழ்கியும் நதிகளிடை மூழ்கியும்
பசிதாக மின்றியெழு நா
மத்தியிடை நின்றுமுதிர் சருகுபுனல் வாயுவினை
வன்பசித னக்கடைத் தும்
மௌனத்தி ருந்துமுயர் மலைநுழை தனிற்புக்கு
மன்னுதச னாடிமுற் றும்
சுத்திசெய் தும்மூல ப்ராணனோ டங்கியைச்
சோமவட் டத்தடைத் தும்
சொல்லரிய வமுதுண்டு மற்பவுடல் கற்பங்க
டோறுநிலை நிற்கவீறு
சித்திசெய் துஞ்ஞான மலதுகதி கூடுமோ?
சித்தாந்த முத்திமுதலே!
சிரகிரி விளங்கவரு தட்சணா மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே!

† குலமிலான் குணங்கு றியிலான் குறைவிலான் கொடிதாம்
புலமிலான் றனக்கென்னவோர் பற்றிலான் பொருந்தும்
இலமிலான் மைந்தர்மன வியில்லானெவன்? அவன்சஞ்
சலமிலான் முத்தி தரும்பர சிவனெனத் தகுமே.

" நடக்கினும், ஓடினும், நிற்கினும்,
வேறொரு நாட்டமின்றி
கிடக்கினுஞ் செவ்வி திருக்கினும்,
நல்லருட் கேள்வியிலே
தொடக்குமென் னெஞ்ச மனமற்ற
பூரணத் தொட்டிக்குள்ளே
முடக்குவன் யான்-பர மானந்த
நித்திரை மூடிடுமே "

என்று இவர் திருவாய்மலர்ந்தபடி ஜீவன்முத்தராய் விளங்கிவந்தனர். இவரை யுடைந்து எச்சந்தேகமும் நீங்காதாரில்லை. எவருக்கும் தர்க்க நீதியாலும், அநுபவத்தாலும், கேட்போர் வியக்கச்* சுருதி முடிவுகளைச் சுலபமாகக் காட்டுவாராயினர். இம்மாதிரி அடியார்களுக்கு அருளி† முடிவில் விதேகமுத்தி யடைந்தனர்.

---

* கடத்தை, மண்ணெனல் உடைந்தபோதோ? விந்தக் கருமச்
சடத்தைப் பொய்யெனல், இறந்தபோதோசொலத் தருமம் ?
விடத்தை நல்லமிர் தாவுண்டு, பொற்பொது வெளிக்கே
நடத்தை காட்டி,யெவ் வுயிரையு நடப்பிக்கு நலத்தோய் !

† நினையு நினைவுக் கெட்டாத
நெறிபெற் றுணர்ந்த நெறியாளர்
வினையைக் கரைக்கும் பரமஇன்ப
வெள்ளப் பெருக்கே! நினதருளால்
மனைவி, புதல்வர், அன்னை, பிதா
மாடு, வீடென் றிடுமயக்கம்
தனையு மறந்திங் குனைமறவாத்
தன்மை வருமோ தமியேற்கே?

# இரண்டாம் அத்தியாயம்.

## தாயுமானவர் கல்வியும், உலக அநுபவமும், குணமும்.

தாயுமானவர், வடமொழியிலும் தென்மொழியிலும், பல நூல்களும் நூலாசிரியர்களின் நடைகளும்; செவ்வனே கரைகண்டவர். நாலு வேதங்களின் நுண்ணிய பொருள்களும், உபநிடதங்களும், சிவாகமங்களும்,* இதிகாச புராணங்களும் கற்றதன்றி, நியாயம், மீமாம்சம், வேதாந்தம் முதலிய தத்துவ ஆராய்ச்சி நூல்களையும் கரைகண்டார். ஆதலால் கற்றுணர்ந்தோர் வியக்கத்தக்க

---

* வேதமுட னாகமபு ராணமிதி காசமுதல்
வேறுமுள கலைகளெல் லாம்,
மிக்காக வத்துவித துவிதமார்க் கத்தையே
விரிவாயெ டுத்துரைக் கும்.
ஓதரிய துவிதமே, யத்துவித ஞானத்தை
யுண்டுபணு ஞானமா கும்;
ஊகமனு பவம்வசன மூன்றுக்கு மொவ்வுமீ
துபயவா திகள்சம்ம தம்;
ஆதலினெ னக்கினிச் சரியையா திகள்போது
மியாதொன்று பாவிக்க நான்
அதுவாத லாலுன்னை நானென்று பாவிக்கின்
அத்துவித மார்க்கமுற லாம்?
எதுபா வித்திடினு மதுவாகி வந்தருள்செய்
எந்தைநீ; குறையு? முண்டோ?
இகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி
எங்குநிறை கின்ற பொருளே!

கல்வி இவரிடம் அமைந்திருந்தது. இதனால், இவர் பலசமய* இலட்சணங்களும் எளிதி லறிந்தனர்.

தமிழிலோ இலக்கண இலக்கியத்தில் இவர் பெரும்புலி. சிலபாக்களில்† இலக்கண நூற்சொற்களை நிறைந்திருக்கின்றன. இலக்கியத்தில் சிறந்த நூல்கள் யாவும், இவர் கற்றனரென்பதற்கும் ஐயுறவில்லை.

---

* அன்னைய னெனுஞ் சிலசமய நின்னையே
அய்யாவை யாவென்ன வே
அலறிடும் சிலசமயம்; அல்லாது பேய்போல
வலறியே யொன்றுமில வாய்ப்

பின்னேது மறியாமல் ஒன்றைவிட் டொன்றைப்
பிதற்றிடும் சிலசமய; மேல்
பேசரிய வொளியென்றும், வெளியென்று நாதாதி
பிறவுமே நிலய மென்றும்,

தன்னேரி லாததோர் அணுவென்று, மூவிதத்
தன்மையாங் கால மென்றும்,
சாற்றிடும் சிலசமய மிவையாகி வேறதாய்ச்
சதாஞான வானந்த மாய்,

என்னையெ னைகருணை விளையாட் டிருந்தவா
றெம்மனோர் புகல வெளிதோ?
இகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி
எங்குநிறை கின்ற பொருளே!

† "வேதாவை யிவ்வணம் விதித்ததேன்? என்னின், உன்
வினைபகுதி, யென்ப னந்த
வினைபேச வறியாது நிற்கவிவை மனதால்
விளைந்ததான் மனதை நாடில்"

"ஆதியந்த மெனுமெழுவா, யீறுந் றேங்கி"
"முன்னிலைசீ, சுட்டொழிநீ யெனப் பலகாலம்,
நெஞ்சே, நான் மொழிந்தேன்"
"சொல்லாலும், பொருளாலும், அளவை யாலும்,
தொடர வொண்ணா வருநெறி"
"உடற்றுயிர்போல் கலந்தென்னுளும்"

தேவாரம், திருவாசகம், திருமந்திரம், சிவவாக்கியம், அருணகிரிநாதர் திருப்புகழ், பெரிய புராணம், கம்ப ராமாயணம் இவற்றிலுள்ள வாக்கியங்கள் மாறுதலின்றியும், மெருகுபெற்றதுபோல் ஒளிசிறந்து, சிறிது மாறப்பட்டும், சுருக்கப்பட்டும், விரிக்கப்பட்டும், தாயுமானவர் பாடல்களில் பல இடங்களில் காண்கின்றோம். சைவ சமயாசாரியர்கள்* சதா இவர் மனதில் வசித்துவந்தனர்.

---

'சொல்லால், தொடர்பொருளால், தொடராப் பரஞ்சோதி."
"பாசபந்த இனமே துணையென் றிருந்தோம்"
"காலமே, காலமொரு மூன்றுங் காட்டும் காரணமே."
"நூலேணி விண்ணேற நூந்துப் பருத்தி வைப்பார்
போலே, கருவிநன்னூல் போதம் பராபரமே."

* (i) அன்றமுத வின்றைவரைச் சனன கோடி,
யடைந்தடைந்திவ் வியாதனையா லழிந்த தல்லால்,
இன்றைவரை முத்தியின்றே; யெடுத்த தேக
மெப்போதோ தெரியாதே; யிப்போ தேதான்
துன்றுமனக் கவலைகெடப் புலோரா யேனைத்
தொழும்புகொளச் சீர்காழித் துரையே! தூது
சென்றிடவே பொருளைவைத்த நாவலோய்! நஞ்
சிவனப்பா வென்றவருட் செல்வத் தேவே!

(ii) தேவர்தொழும் வாதவூர்த் தேவே! யென்பேன்.
திருமூலத் தேவே! யிச் சகத்தோர் முத்திக்
காவலுறச் சிவவென்வாக் குடனே வந்த
அரசே! சும் மாவிருந்தன் அருளைச் சார
பூவுலகில் வளரருண கிரியே! மற்றைப்
புண்ணியர்கா ளோவென்பேன். புரையொன் றில்லா
ஓவியம்போ லசைவறவும் தானே நிற்பேன்,
ஓதரிய துயர்கெடவு முரைக்கு முன்னே.

சங்கநூல்களும் பல இவர் ஆராய்ந்துள்ளார். சமண நூல்களான நாலடியார் முதலியன செய்யுள்களைச் சைவரூபமாய் ஆங்காங்கு எடுத்துக் காட்டியிருக்கின்றனர். எல்லாத் தமிழ் நூலறிவாளரையும் ஒருங்கு சேர்த்து விழுங்கும் கல்வி, தாயுமானவர் பாடல்கள் காட்டுகின்றன.

கல்வியுடன், கேள்வியும் அதிகமாய்த் தாயுமான

---

அடியார் வணக்கம்.

(iii) வெம்பந்தந் தீர்த்துலகாள், வேந்தன் திருஞான
சம்பந்த னையருளால் சாருநா ளென்றோ ?

(iv) எரின் சிவபோக மிங்கிவற்கே யென்ன, வுழு [றோ ?
வாரங்கோள் செங்கையர்தாள் வாரம்வைப்ப தென்

(v) பித்தரிறை யென்றறிந்து, பேதைபாற் றூதனுப்பும்
வித்ததமிழ் சமர்த்தர் மெய்புகழ்வ தென்றோ ?

(vi) போதவூர் நாடறியப் புத்தர்தமை வாதில்வென்ற
வாதவூரை யனன்பை வாஞ்சிப்ப தென்றோ?

(vii) ஓட்டுடன் பற்றின்றி, யுலகைத் துறந்தசெல்வப் [றோ?
பட்டினத்தார், பத்ராகிரி, பண்புணர்வ தென்

(viii) கண்டதுபொய் யென்றகண்டா காரசிவ மெய்யெனவே
விண்டசிவ வாக்கியர்தாண் மேவுநா ளென்றோ?

(ix) சக்கர வர்த்தி தவராச யோகியெனு
மிக்குதிரு மூலனருள் மேவுநா ளென்றோ?

(x) கந்தானு பூதிபெற்று கந்தானு பூதிசொன்ன
வெந்தை, யருணகிரி யிருக்குநா ளென்றோ.?

வருக்குண்டு. கல்வியினும் கேள்வியே சிறந்ததென்பவர் அபிப்பிராயம்*. கடவுளே, மெய்த்தன்மை உணர்ந்தோருள்ளத்திலிருந்து நமக்கு அறிவைப் புகட்டுகின்றார் என்பதும் அவர் சித்தாந்தம்.†

இவர் ஆராய்ச்சியில் மிகவும் சிறந்தவர். ஏதோ ஒரு கொள்கையின்பாற்பட்டு அதில் லயப்படாமல், இதர கொள்கைகளையும் அன்புடன் பற்றி ஒன்றையும் அலட்சியம் செய்யாமல் சிரத்தையுடன் கவனித்து, அன்னப் பறவை பாலை நீரினின்று நீக்கி உண்பதுபோல், நன்மை

---

* கல்லாதே னாயினும், கற்றுணர்ந்த மெய்யடியார்
சொல்லாலே, நின்னைத் தொடர்ந்தேன், பராபரமே.

† மெய்விடா நாவுள்ள மெய்யரு ளிருந்து, நீ
மெய்யான மெய்யையெல் லாம்,
மெய்யென வுணர்த்தியது மெய், யிதற் கையமிலை,
மெய்யேது மறியா, வெ றும்
பொய்விடாப் பொய்யனே னுள்ளத்தி ருந்துதான்
பொய்யான பொய்யையெல் லாம்,
பொய்யென வுணர்வமே புகலவைத் தாயெனிற்,
புன்மையே னென்செய்கு வேன் ?
மைவிடா தெழுநீல கண்டகுரு வே! விஷ்ணு
வடிவான ஞானகுரு வே !
மலர்மேவி மறையோது நான்முகக் குருவே, ம
தங்கவொடு நின்றகுரு வே !
“ கைவிடா தே ”, யென்ற வன்பருக் கன்பாய்க்க
ருத்துடு ணர்த்துகுரு வே!
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணாக ரக்கடவு ளே !

களைக் கடைப்பிடித்தவர்* சாதுசங்கம் இவர் நீங்காத வர்.† மனிதனாய்ப் பிறந்தவன் நல்ல சாவகாசமோ, அல்லது துஷ்ட சாவகாசமோ செய்வது இயல்பாம். உலகத்தில், யார் சாவகாசமும் இல்லா திருக்கலாகா தாகையால், சற்சங்கத்துவம் சுவாமிகள் ஆசித்தார். ஏனெனில், பெரியோர்கள் தன்னுயிர்போல் மன்னுயிரை எண்ணுகின்றன ராதலாலும்‡ அவருடன் பழகுதலினால் உண்

---

* பற்றுவெகு விதமாகி, யொன்றைவிட் டொன்றனைப்
பற்றியுழல் கிருமிபோல,
பாழ்ஞ்சிந்தை பெற்றநான், வெறியாக நின்னருள்ப
கர்ந்துமறி யேன். துவித மோ
சிற்றறிவ தன்றியும் எவரேனும் ஒருமொழி
திடுக்கென் றுரைத்தபோது,
சிந்தைசெவி யாகவே பலறயறைய, வுதரவெந்
தீநெஞ்ச மளவளாவ,
உற்றுணர வுணர்வற்றுன் மத்தவெறி யினர்போல்,
உளறுவேன். முத்திமார்க் கம்
உணர்வதெப் படி?யின்ப துன்பஞ்ச மானமாய்
உறுவதெப் படி?யாயி னும்
மற்றெனக் கையநீ சொன்னவொரு வார்த்தையினை
மலையிலக் கெனநம்பி னேன்,
மந்திரகுரு வே!யோக தந்திரகுரு வே!மூலன்
மரபின்வரு மௌனகுரு வே.!

† சற்குணத்தைப் போன்றவஞ்சக் காரர்கள்கை கோவாமல்,
நற்குணத்தார் கைகோத்து நான்திரிவ தென்றுளோ?

‡ எவ்வுயிருந் தன்னுயிர்போ லெண்ணும்த போதனர்கள்
செவ்வறிவை நாடி, மிகச் சிந்திப்ப தெந்நாளோ?

டாகும் நன்மைகள்* அளவில† வென்பதும் தாயுமான வர் அபிப்பிராயமாகும்.‡

வடமொழி தென்மொழிகளிற் சிறந்த கல்வியும், கேள்வியும் அமையப்பெற்று, சாதுசங்கத்தில் சதாகாலம்

---

* இங்கற்ற படியந்த மௌவறியு நல்லறிஞர்,
எக்காலமும் முதவு வார்.
இன்சொற்றவ ரார்.பொய்ம்மை யாமிழுக் துரையா
ரிரங்குவார். கொலைகள் பயிலார்,
சங்கற்ப சித்தரவ ருள்ளக் கருத்திலுறை
சாக்ஷிநீ, யிகபரத் தும்
சந்தான கற்பகத் தேவாயி ருந்தே
சமஸ்தவின் பமுமுதவு வாய்!
சிங்கத்தை யொத்தவெப் பாயவரு வினையினைச்
சேதிக்க வருசிம்பு ளே!
சிந்தாகு லத்திமிரம் அகலவரு பானுவே!
தீனனேன் கரையேற வே,
கங்கற்ற பேராசை வெள்ளத்தின் வளருட்
ககனவட் டக்கப்ப லே!
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணு கரக்கடவு ளே.!

† மனத்தாலும், வாக்காலும், மன்னவொண்ணு மோன
இனத்தாரே நல்ல வினத்தார்—கனத்தபுகழ்
கொண்டவரும் அன்னவரே. கூறரிய முத்திநெறி
கண்டவரு மன்னவரே காண்.

‡ "தெய்வ நல்லருள் படைத்த அன்பரொடு
சேர வும், கருணை கூர்வையோ?
தெரிவ தற்கரிய பிரமமே! யமல
சிற்சு கோதய விலாசமே!"—

கழித்தனரெனின், இவருக்கு உலக அநுபவம் உண்டோ என்கின்ற ஐயுறவு நமக்கு உண்டாகக்கூடும். அவர் பாடல்கள் யாவும் படிக்கும் ஒருவன், இவருக்கு உலக அநுபவம் எந்த விஷயத்திலும் இல்லாமற் போகவில்லை என்பான். பம்பரம்* வட்டு† காற்றாடி‡ சிற்றில் கட்டு

---

* ஆடாம லோய்ந்திட்ட பம்பரம் போல், விஷய
டங்கிமனம் வீழ, நேரே
யறியாமை யாகின்ற விருளகல; விருளொளியு
மல்லாதி ருந்தவெளி போற்,
கோடாதெ னைக்கண்டெ னக்குணிறை சாந்தவெளி
கூடியின் பாதீத மும்
கூடினே னேசரியை கிரியையின் முயன்றநெறி
கூடினே னேவல்ல னியான்
ஈடாக வேயாறு வீட்டினில் நிரம்பியே
யிலகிவளர் பிராணனென் னும்,
இருந்தியி னக்கட்டி யோகபா னாகாமல்
(a) ஏழைக் குறும்ப னாகித்
தேடா தழிக்கவொரு மதிவந்த தென்கொலோ?
தேடரிய சத்தாகி யென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே.

† ஒருமொழியே பலமொழிக்கு மிடங்கொடுக்கு மந்த
ஒருமொழியே மலமொழிக்கு, மொழிக்குமென மொழிந்த
குருமொழியே மலையிலக்கு. மற்றைமொழி யெல்லாம்
கோடின்றி வட்டாடல் கொள்வதொக்கும் கண்டாய்;
கருமொழியிங் குனக்கில்லை, மொழிக்குமொழி ருசிக்க
கரும்பனைய சொற்கொடுனைக் காட்டவுங்கண் டனை, மேல்
தருமொழியிங் குனக்கில்லை; யுன்னைவிட்டு நீங்காத்
தற்பரமாய் ஆநந்தப் பொற்பொதுவாய் நில்லே.

‡ ஆணிலே, பெண்ணிலே, யென்போல வொருபேதை
யகிலத்தின் மிசையுள்ள தோ?
ஆடிய கறங்குபோ லோடியுழல் சிந்தையை,
யடக்கியொரு கணமேனும், யான்

தல்* மூதலான சிறு பிள்ளைகள் விளையாட்டில் சிறுவர்கள் எப்படி மனலய மடையப்பெறுவார்க ளென்று இவருக்கு நன்றாய்த் தெரியும். ஏழைகள் படும் கஷ்டங்களும்,

---

காணிலேன்; திருவருளை யல்லாது மௌனியாய்க்
கண்மூடி யோடு மூச்சைக்
கட்டிக்க லாமதியை முட்டவே மூலவெங்
கனலினை யெழுப்ப வினைவும்
பூணிலே னிற்றைநாட் கற்றதும் கேட்டதும்
போக்கிலே போக விட்டுப்,
பொய்யுலக நடயினே நயினும், கடையான
புன்மையே யின்ன மின்னம்
வீணிலே யலையாமல், மலையிலக் காகநீர்
வெளிப்படத் தோற்றல் வேண்டும்
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர் கணமே!

* பட்டப் பகற்பொழுதை, யிருளென்ற மருளர்தம்
பட்சமோ யெனது பட்சம்?
பார்த்தவிட மெங்கணும், கோத்ரநிலை குலையாது
பரமவெளி யாகவொருசொல்
இட்டமுடன் மௌனியாய் அருள்செய் திருக்கவும்,
சோராம லாராக நான்,
சிறுவீடு கட்டியதின் அடுசோற்றை யுண்டுண்டு
தேக்குசிறி யார்கள் போல
நட்டணைய தாக்கற்ற கல்வியும்,வி வேகமும்,
நன்னிலய மாக வுன்னி,
நானென்று நீயென்றி ரண்டில்லை யென்னவே
நடுவே முளைத்த மனதைக்
கட்டவறி யாமலே, வாடினே னெப்போது
கருணைக்கு ரித்தாவ னோ?
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணாக ரக்கடவு ளே!

திரவியசம்பன்னர் ஒருகஷ்டமும்படாமல் முன்னோர் சம்பாதித்தப் பொருளை அழிப்பதும், இவர் கண்டுள்ளார் (a) பாலர்கள் தன்மைமாத்திர மன்றி* பிழையற்றவுணர்ச்சியற்றுத் தடுமாறும் உன்மத்தர், பேய்பிடித்து ஆடுகிறவர்கள், கொடுந்தொழிலிற் சிறந்தவேடர்கள் † முதலியோர் குணங்களின் தன்மை செவ்வையாக கண்ணுற்று, அவை தன்னிட மணுகாது தன்னைக் காத்தனர். கோரரூபிகளாய்க் கொடுந்தொழில் செய்யும் தீயோர்களைக் காட்டிலும், இனிய வசனமும், அழகு வாய்ந்த மாதர்கள் ஆடவர்களுக்கு விளைவிக்கும் துன்பம் அதிகமென அவர் கண்டார். ஸ்திரீகளில் யாவரையும் ஒருங்கு சேர்த்துக் கண்டிக்கத் தாயுமானவருக்கு எப்போதும் மனமில்லை. வர்ணம், வாசனைகள் முதலிய மினுக்குப் பொடிகள் அணிந்து, மேலழகைக் கவனித்து, உள்ளழ

---

(a) 25-ம் பக்கம் நோக்குக.

* மத்தர் பேயரொடு பாலர் தன்மையது
மருவியே துரிய வடிவமாய்,

மன்னு தேசமொடு, கால மாதியைம
றந்து நின்னடிய ரடியிலே,

பத்தி யாய்நெடிது நம்பு மென்னை,யொரு
மையல் தந்தகில மாயையைப்,

பாரு பாரென நடத்த வந்ததென ?
பார தத்தினுமி துள்ளதோ ?.

† " ஆங்கார மானகுல வேடவெம் பேய், பாழ்ந்த
ஆணவத் தினும்வலிது காண் "

" ஐவ ரென்றபுல வேடர் கொட்டமத
டங்க மர்கடவன் முட்டியாய் "

கைக் கவனியாத ஸ்திரீகளையே தூஷித்து,* இவர்கள் ஆடவர்களுக்கு விஷமெனப் போதிக்கலாயினர். கற்புடைய மாதர்†களின் உள்ளழகைக்கண்டு வியப்பதுமன்றி, இவர் அவரை ஞானிகளுக்கு ஒப்பிடுவர். ஏனெனில் உடல், பொருள், ஆவி மூன்றும்‡ கடவுளுக்கு சமர்ப்பிக்கும் பக்தன்போல், இம்மூன்று பொருள்களையும்

---

* (i) முத்தனைய மூரலும், பவளவா யின்சொலும்,
முகத்திலகு பசுமஞ்ச ளும்,
மூர்ச்சிக்க விரகசன் னதமேற்ற, விருகும்ப
முலையின்மணி மாலை நால,
வைத்தெமை மயக்கி, யிரு கண்வலையை வீசியே,
மாயாவி லாச யோக
வாரிதியி லாழ்த்திடும் பாழான சிற்றிடை
மடந்தையர்கள் சிற்றின்ப மோ,
புத்தமிர்த போகம்பு சித்து, விழி யிமையாத
பொன்னாட்டும் வந்த தென்றால்
போராட்ட மல்லவோ? பேரின்ப முத்தியிப்
பூமியிலி ருந்து காண,
எத்தனைவி காதம்வரு மென்றுசுகர் சென்றநெறி
யிவ்வுலக மறியாத தோ?
இகபரமி ரண்டினிலு முயிரினுக் குயிராகி
யெங்குநிறை கின்ற பொருளே!

(ii) "மாதரைப் பழித்தல்", என்னும் 15 குறள் வெண் செந்துறையையும் நோக்குக

† கற்புறு சிந்தைமாதர், கணவரை யன்றிவேறோர்
இற்புறத் தலைநாடார். யாங்களு மின்பவாழ்வுந்
தற்பொறி யாகநல்கும் தலைவநின் னலதோர்தெய்வம்
பொற்புறக் கருதோம்கண்டாய் பூரணா னந்தவாழ்வே!

‡ வைத்தபொரு ளுடலாவி மூன்று நின்னை
வசமெனவே யான்கொடுக்க வாங்கிக் கொண்டு,
சித்தமிசை புகுந்ததுதான் மெய்யோ பொய்யோ?
சிறியேற்கிங் குளவுரையாய் திகையா வண்ணம்.

தம் * கணவனுக்கு தத்தம் செய்தவர் பற்றற்றார்போல் பரம்பொருளைச் சேராரோ? ஆதலால் கற்புவாய்ந்த இல்லறக்கிழத்தியுடன் நடாத்தும் இல்வாழ்க்கை இவர் யாதும் புறங்கூறாமல் † அல்வழியின்பத்தின் ‡ பழுதையே பகரலானார்.

---

* (i) தன்னை யறிந்தால் தலைவன்மேற் பற்றலது
பின்னையொரு பற்றுண்டோ! பேசாய், பராபரமே?
(ii) காதலால் வாடினதும் கண்டனையே, யெம்மிறைவர்
போதரவா யின்பம் புசிப்பேனோ பைங்கிளியே?

† (i) மெய்விசு நாற்றமெல்லாம் மிக்கமஞ்ச ளால்மறைத்து
பொய்விசு வாயார் புலையொழிவ தென்றோ?
(ii) துன்மார்க்க மாதர் மயக்கம்—மனத்
தூயர்க்குபற்றாது சொன்னேன் சனகன்,
தன்மார்க்க நீதி திருஷ்டாந்தம்—அவன்,
தானந்தமான சதானந்த னன்றோ?

(சங்கர சங்கர சம்பு).

‡ (i) ஆலம் படைத்த விழியார்கண்
மயல்கொண் டவர்செ யிந்திர
ஜாலம் படைத்து, தளர்ந்தனை
யேயென் றும் தண்ணருள் கூர்,
கோலம் படைத்துக்கல் லாலடிக்
கீழ்வைக்கும் கோவுக் கன்பாம்
பாவம் படைக்கத் தவம்படை
யாதென்கொல் கன்னெஞ்ச மே?
சிந்தைத் துயரோன் றேநுபாவி
சினந்து சினந்து போர்முயங்க,
நிந்தைக் கிடமாய்ச் சகவாழ்வை
நிலையென் றுணர்ந்தே நினைக்கின்றேன்;
எந்தப் படியுன் அருள்வாய்க்கும்?
எனக்கெப் படிநீ யருள்செய்வாய்?
பந்தத் தியாற் றவர் கெளிய
பரமா னந்தப் பரம்பொருளே!

தாயுமானவருக்கு இரவலர்* முதல் அரசர்† வரையி லுள்ள சகல‡ வித அந்தஸ்தின் வாழ்க்கை இலட்சணங்

---

* இரப்பானங் கொருவனவன் வேண்டுவகேட்
டருள்செயென வேசற் றேதான்
புரப்பான்றன் அருள்நாடி யிருப்பதுபோல்,
எங்குநிறை பொருளே கேளாய்!
மரப்பான்மை நெஞ்சினன்யான் வேண்டுவகேட்
டிரங்கெனவே மௌனத் தோடந்
தரப்பான்மை யருணிறைவி லிருப்பதுவே
பராபரமே சகச நிஷ்டை.

† கெசதுரக முதலான சதுரங்க மனமாதி
கேள்வியி னிசைந்துநிற் பக்
கெடிகொண்ட தலமாறு மும்மண்ட லத்திலுங்
கிள்ளாக்குச் செல்லமிக் க
தெசவிதய சாய்நின்ற நாதங்க ளொளியிடச்
சிங்காச னாதிபர்க ளாய்
திக்குத் திகந்தமும் பூரணம திக்குடை
திகழ்ந்திட, வசந்தகா லம்
இசையமலர் மீதுறை மணம்போல ஆனந்தம்
இதயமேற் கொள்ளும்வண் ணம்
என்றைக்கு மழியாத சிவராஜ யோகராய்,
இந்திராதி தேவர்களெ லாம்
விஜயஜய ஜயவென்ன வாசிசொல வேகொலு
விருக்குநம் பெருமையெளி தோ?
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கண மே.

‡ (i) எறிதி ரைக்கடல்நி கர்த்த செல்வமிக
அல்ல வென்றொருவர் பின்செலா,
தில்லை யென்னுமுரை பேசி டாதுலகி
லெவரு மாமௌன மதிக்கவே
நெறியின் வைகிவளர் செல்வ மும்முதவி
நோய்க ளற்றசுக வாழ்க்கையாய்
நியம மாதிநிலை நின்று ஞானநெறி
நிஷ்டை கூடவுமெந் நாளுமே

களும் சூதாடுவோர்* முதலிய துர்ச்சனர் குணங்களும் தெரியும். இக்குணங்கள் உண்டானோர் அவற்றை எங்ஙனம் பெற்று அநுபவிப்பார்க ளென்பதும், பிறருக்கு

---

அறிவி னின்றகுரு வாயு ணர்த்தியது
மன்றி மோனகுரு வாகியே
அகில மீதுவர வந்த சீருனை
யைய வையவினி யென்சொல்வேன்!
சிறிய னேனைநம தடிமை யென்றனது
திருவு ளத்தினிலி ருந்ததோ?
தெரிவ தற்கரிய பிரமமே யமல
சிற்சு கோதய விலாசமே!

(ii) காயாத மரமீது கல்லேறு செல்லுமோ?
கடவுணீ, யாங்களடி யேம்
கர்மபந் தத்தினாற் சன்மபந் தம்பெறக்
கற்பித்த துன்னதரு ளே;
வாயார உண்டபேர் வாழ்த்துவது, நொந்தபேர்
வைவது, மெங்களுல கம்.
வாய்ப்பாடு நிற்க, நின் வைதிக வொழுங்குநினை
வாழ்த்தினாற் பெறுபேறு தான்;
ஓயாது பெறுவரென முறையிட்ட தாற், பின்ன
ருளறுவது கருமமன் றாம்;
உபயநெறி யீதென்னி லுசிதநெறி யெந்தநெறி
யுலகிலே பிழைபொறுக் கும்?
தாயான கருணையுமு னக்குண்டெ னக்கினி
சஞ்சலம் கெடவருளு வாய்,
சர்வபரி பூரண, அகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவ மே.

* சூதாடு வார்போல் துவண்டு துவண்டுமனம்
வாதாடி னென்னபயன் வாய்க்கும் பராபரமே?

அக்குணங்கள் செய்யும் இன்பதுன்பங்கள் எவ்வாறென்ப தும் உள்ளங்கை நெல்லிக்கனி யெனஅறிந்தார். வீட்டில் இணங்கிவாராத சிறு குழந்தைகளேயும்,* புருஷனுக்கு அடக்கமாய் ஒழுகாமல் தான்றோணியாய் இஷ்டமான இடங்களுக்குச் சென்றுவரும் ஸ்திரீகளால் அவ்வவர்கள் குடும்பங்கள் படும் பலவித கஷ்டங்களேயும் இளகிய மன துடன் கண்டு பரிதாபப்படுவார். சனங்கள் கஷ்டத்தை நோக்கி வருந்தினரேயன்றி, செல்வர் முதலானோர் இன் பங்களேக் கண்டு இவர் அழுக்காறுகொண்டவரல்லர். ஏனெனில், இல்வாழ்க்கையில் மாடுமக்கள் தாய் தந்தையர் யாவரும் சந்தையிற் சேர்ந்த கூட்டத்திற்கு ஒப்பாக்கி னர்.† இவ்வுலக வாழ்க்கை இந்திரஜாலம்போல் மோச

---

* சொல்லா னதிற்சற்றும் வாராத பிள்ளையைத்
தொட்டில்வைத் தாட்டி யாட்டி
தொடையினைக் கிள்ளல்போல், சங்கற்பம் ஒன்றில்தொ
டுக்கும்தொ டுத்தழிக் கும்;
பொல்லாத வாதனையெ னுஞ்சப்த பூமியிடை
போந்துதலைச் சுற்றி யாடும்;
புருஷனி லடங்காத பூவைபோற் றனேபு
றம்போந்து சஞ்சரிக் கும்;
கல்லோ டிரும்புக்கு மிகவன்மை காட்டிடும்;
காணுது கேட்டவெல் லாம்
கண்டதாக் காட்டியே யணுவாச்சு ருக்கிடும்;
கபடநா டகஜால மோ
எல்லாமும் வலதிந்த மனமாயை யேழையா
மென்னல டக்கவச மோ?
இகபா ரண்டினிலு முயிரினுக் குயிராகி
யெங்குநிறை கின்றபொரு ளே!

† தந்தைதாய், மகவுமனே, வாழ்க்கை, யாக்கை,
சாமனைத்து மௌனியருள் தழைத்த போதே,
இந்திரஜா லங், கனவு, கானல் நீராய்,
இருந்ததுவே இவ்வியற்கை, என்னே, என்னே?

மான தென்பதும் அதற்காகத் *தேள்கொட்டிய குரங்கு போல் மனம் குதிப்பதில் பயனில்லை என்பதும், அவருடைய கருத்து.

ஒவ்வொரு வீட்டில், அந்தரங்கத்தில் சமையல்† அறைமுதல், கடைத்தெருவு,‡ வரையில் உள்ள சமுசார விஷயங்கள்§ நன்குணர்ந்தவரெனும், தாயுமானவர் வீட்டி

---

* கொள்ளித்தேள் கொட்டிக் குதிக்கின்ற பேய்க்குரங்காய்க்
கள்ளமனம் துள்ளுவதென் கண்டாய், பராபரமே.

† போனக மிருக்கின்ற சாலையிடை வேண்டுவபு
சித்தநற்கி ருக்குமது போல்,
புருஷர்பெறு தர்மாதி வேதமுட னாகமம்,
புகலுமதி னுலாம்ப யன்,
ஞானநெறி, முக்யநெறி, காட்சி, யனு மானமுதல்,
நாளுவி தங்கள்தேர்ந் து,
நானுனெ னக்குழறு படைபுடை பெயர்ந்திடவு,
நான்குசா தனமுமோர்ந் திட்
டானநெறி யாஞ்சரியை யாதிசோ பானமுற்
றணுபக்ஷ சம்புபக்ஷம்,
ஆமிரு விகற்பமும், மாயாதி சேவையும்,
அறிந்திரண் டொன்றென்னு மோர்
மானத விகற்பமற, வென்றுநிற் பதுநமது
மரபென்ற பரம குருவே?
மந்த்ரகுரு வே! யோக தந்த்ரகுரு வே! மூலன்
மரபின்வரு மௌன குருவே!

‡ தேடாத தேட்டினரே, செங்கைதுலாக் கோல்போல்,
வாடாச் சமநிலையில் வாழ்வார் பராபரமே.

§ தேடும் திரவியமும், சேர்ந்தமணிப் பெட்டகமும்,
கூட வரும்துணையோ? கூறாய் பராபரமே.

லேயே காலங்கழித்தவரல்லர். இயற்கைப்பொருள்களின் அழகைத் தன்னிச்சையாய் குழந்தைப்பருவத்தில் மனிதன் அண்ட சராசரங்களைக் கண்டு களிப்பதுபோல், தாயுமானவர் யௌவனத்திலும்* முதிர்ந்த வயதிலும் இயற்கையிலுள்ள நீர் நிலை, மரம், சோலை, நிழல், பூரணச்சந்திரன் முதலிய சித்திரிக்கத்தக்க காட்சிகளையும் அவற்றின் அழகையும் நோக்குவார். அஃறிணைப்பொருள்கள், இயற்கையில் காண்போருக்கு இன்பமளிக்கும் காட்சிகள், கடவுள் தியானத்திற்கு யாதொரு இடையூறும் விளைவிக்காவென்பதே, அவர் சித்தாந்தமாம். ஏனெனில், எல்லா

---

* கொந்தவிழ் மலர்ச்சோலை நன்னீழல் வைகினும்,
குளிர்தீம் புனற்கையள் ளி
கொள்ளுகினு, மந்நீரி டைத்திளைத் தாடினும்,
குளிர்சந்த வாடைமட வார்
வந்துலவு கின்றதென முன்றிலிடை யுலவவே
வசதிபெறு போதும்,வெள் ளை
வட்டமதி பட்டப் பகற்போல நிலவுதா
மகிழ்போதும், வேலையமு தம்
விந்தைபெற அறுசுவையில் வந்ததென வமுதுண்ணும்
வேளையினு, மாலகந் தம்
வெற்றிலைய டைக்காய்வி ரும்பிவேண் டியவண்ணம்
விளையாடி விழிதுயிலி னும்,
சந்ததமும் நின்னருளை மறவாவ ரந்தந்து
தமியேனை ரக்ஷைபுரி வாய்,
சர்வபரி பூரணவ கண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவ மே!

இயற்கைப்பொருள்களும்* கடவுள் சொரூபமாய் ஞானிக்கு விளங்குமாதலால், இயற்கை ரூபமாய் பரமன் காண்பதும் இயல்பே† யென்பார். அதனால் குற்றமற்ற காட்சிகளுள்ள இடங்களில்‡ இவர் சஞ்சரிக்கும் தொழிலினராயிருக்கலாம்.

---

* வானாதி பூதமா, யகிலாண்ட கோடியாய்,
மலையாகி, வளைகடலு மாய்,
மதியாகி, யிரவியாய், மற்றுளவெ லாமாகி,
வான்கருணை வெள்ளமா கி,
நானாகி நின்றவனு நீயாகி நின்றிடவு
நானென்ப தற்றிடா தே
நானென னக்குளறி நானவி காரியாய்,
நானறிந் தறியாமை யாய்ப்
போனவ திட்டவலி வெல்லவெளி தோ? பகற்
பொழுதுபுகு முன்கண் மூடிப்
பொய்த்துயில்கொள் வான்றனையெ ழுப்பவச மோ? வினிப்
போதிப்ப தெந்தநெறி யை?
ஆனாலு மென்கொடுமை யனியாய மனியாயம்
ஆர்பால் எடுத்துமொழி வேன்,
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மானபர மே!

† (i) பாராதி பூதமெல்லாம் பார்க்குங்கா லப்பரத்தின்
சீராக நிற்கும திறங்கண்டாய்—நேராக
நிற்கும் திருவருளில் நெஞ்சேயான் நிற்பதல்லால்
கற்குநெறி யாதினிமேற் காண்.

(ii) ஒன்றிரண்டாய் விவகரிக்கும் விவகாரம் கடந்தேழாம் யோக பூமி
நின்றுதெளிந் தவர்பேசா மௌனநியா யத்தை,நிறை நிறைவைத் தன்னை,
அன்றியொரு பொருளிலதா வெப்பொருட்கும் தான்முதலா யசலமாகி,
யென்றுமுள வின்பத்தைத் தண்ணென்ற சாந்தபத வியற்கை தன்னை.

‡ மூர்த்தி,தலம், தீர்த்த, முறையாற் றொடங்கினர்க்கோர்
வார்த்தைசொல, சற்குருவும் வாய்க்கும் பராபரமே.

## மூன்றும் அத்தியாயம்

### தாயுமானவர் தேகதிடமும், புறத்தொழில்களும்.

தாயுமானவர், பிள்ளையில்லை யென்று வரம் வேண்டிப் பெற்றப் பிள்ளை யாதலால், அவர் தாய் தந்தையர் இவரை மிகவும் செல்வாக்குடன் வளர்த்ததாய்க் காணப்படுகின்றது. இவரும் அவர்களை உள்ளன்புடன் பரவலாயினர்.* சிறுபோதிலிருந்து அத் தாய் தந்தையர் இவரை ஒருவித சரீர கஷ்டமான வேலைகளில் பழக்கியதில்லை. கல் முள்† நிறைந்த இடங்களில் நடக்க விட்டதுமில்லை.

---

* தந்தை, தாய்,தமர், மகவெனும், அவையெலாம் சகத்தில்
பந்த மாமென்றே யருமறை வாயினும் பகர்ந்த.
எந்தை, நீயெனை யின்னமவ் வல்லலி லிருத்தின்,
இந்தை தானதெளிந் தெவ்வணம் உய்வணம் செப்பாய்!

தாயுந் தந்தையு மெனக்குற வாவது சாற்றின்,
ஆயு நீயுநின் அருளும்நின் அடியரு மன்றோ?
பேய னேன்,திரு வடியிணைத் தாமரை பிடித்தேன்,
நாய னே,யெனை யாளுடை முக்கணு யகனே.

† வெந்நீர்போ றதேனுடல், காலின்முட் டைக்கவும்
வெடுக்கென் றகைத்தெடுத் தால்
விழியிமைத் தங்ஙனே தண்ணருளை நாடுவேன்.
வேறொன்றை யொருவர்கொல் லின்,
அந்நேரம் ஐயோ!என் முகம்வாடி நிற்பதுவும்,
ஐய,நின் னருளறியு மே,
ஆனாலும் மெத்தப்ப யந்தவனி யானென்னை
யாண்டநீ கைவிடாதே;
இந்நேர மென்றிலை,யு டர்சுமைய தாகவும்,
எடுத்தா விறக்கவென் றே
எங்கெங்கு மொருதீர்வை ஆயமுண் டாயினும்,
இறைஞ்சுசுக ராதியா ன
தொன்னீர்மை யாளர்க்கு மானிடம்வ குத்தவருள்
துணையென்று நம்புகின் றேன்.
சுத்தநிற் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரி யே.

அதனால் இவர் மனம்போல், தேகமும் மிக மிருதுவாய் இருந்ததால் முரட்டுத்தனமானவேலைகளுக்கு பயன்படக் கூடியதாயில்லை. ஆயினும் பயிர்வேலையான தமது குலத் தொழில், அத் தொழிலுக்குச் சம்பந்தமான காடு களைத் தல்,* கலப்பை முதலியனவின் இரும்பு† சாமான்கள்

---

* காராரு மாணவக் காட்டைக் களைந்தறக்
கண்டகங் காரமென் னும்
கல்லைப் பிளந்து, நெஞ் சகமான பூமிவெளி
காணத்திருத்தி, மென் மேல்
பாராதி யறியாத மோனமாம் வித்தைப்
பதித்தன்பு நீராக வே
பாச்சி, யது பயிராகு மட்டுமா மாயைவன்
பறவையணு காதவண் ணம்
நேராக நின்று, விளை போகம்பு சித்துய்ந்த
நின்னன்பர் கூட்டமெய் த,
நினைவின்ப டிக்குநீ முன்னின்று காண்பதே
நின்னருட் பாரமென் றும்,
ஆராரு மறியாத சூதான வெளியில்வெளி
யாகின்ற துரியமய மே,
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மானபர மே.

† குறிக ளோடுகுண மேது மின்றியன
லொழுக நின்றிடுமி ரும்பனல்
கூட லின்றியது வாயி ருந்தபடி,
கொடிய வாணவஅ றைக்குளே,
அறிவ தேதமற வறிவி லாமைமய
மாயி ருக்குமெனை, யறிவினால்
அளவி லாததனு கரண மாதியை
யளித்த போதுனைய றிந்துநான்,

செப்பனிடுதல், ஏர் உழுதல், நீர்பாய்ச்சல்,* களை பறித்தல், முதலிய வேலைகள் இவருக்குத் தெரியாதெனக் கூறலாகாது. அவற்றில் இவர் அநுபவம் படிப்பால் வந்ததல்ல. அவ்வாறு இராதெனின், அம்மறுப்பு அவர் பாடல்களில் காட்டும் அநுபவ சம்பந்தமான மேற்கோள்களுக்குப் பொருந்தாது-உலகநடைக்கு தானும் ஒருவாறு கட்டுப்பட்டு சில காலம் உடலுக்காகவும்† உழைத்தனரென்பதற்குச் சந்தேகமில்லை.

இவர் கல்விகேள்விகளைப் பலருக்குப் பயன்படுமாறு

---

பிறிவி லாதவனை நின்றி ராதபடி,
பலநி றங்கவரு முபலமாய்ப்,
பெரிய மாயையில ழுந்தி, நின்னதுப்ர
சாத நல்லருண்ம றந்திடும்
சிறிய னேனு, முனை வந்த ணைந்துசுக
மாயி ருப்பதினி யென்றுகாண் ?
தெரிவ தற்கரிய பிரம மே,யமல
சிற்சு கோதயவி லாசமே ?

* வாயாத இன்பவெள்ளம் வந்துன் வழியாகப்
பாயாதோ, நானும் பயிராய்ப் பிழையேனோ ?
ஓயாம லுன்னி உருகு நெஞ்சே ; அந்நிலைக்கே
தாயான மோனனருள் சந்திக்க வந்திடுமே.

† பொய்திகழு முலகநடை யென்சொல்கேன், என்சொல்கேன் !
பொழுதுபோக் கேதென்னி லோ,
பொய்யுடல்நி மித்தம்பு சிப்புக்க லைந்திடல்,
புசித்தபின் கண்ணுறங் கல்,
கைதவம லாமலிது செய்தவம தல்லவே,
கண்கெட்ட பேர்க்கும்வெளி யாய்க்
கண்டதிது, விண்டிதைக் கண்டித்து நிற்றலெக்
காலமோ ? அதையறிகி லேன் !

இனிய பாடல்கள்† சமுசாரியாய் வாழுங்காலத்திலும் செய்துகொண்டே வந்தனர். பாடல்கள் எழுதும் திறமைமாத்திரமன்று, இவருக்கு பெரிய சபைகளில் பிரசங்கம் செய்யத்தக்க சிறந்த* நாவலத்தன்மையுமுண்டு. †இதனால் இவர்காலத்தில் வசித்திருந்த பலர் இவர்

---

* பாடாது பாடிப்ப டித்தளவில் சமயமும்
பஞ்சுபடு சொல்லனிவ னைப்
பார்மினோ, பார்மினோ, என்றுசபை கூடவும்
பரமார்த்த மிதுவென்ன வே,
ஆடாது மாடிநெஞ் சுருகிநெக் காடவே
யமலமே, ஏகமே! யெம்
ஆதியே! சோதியே! எங்குநிறை கடவுளே!
அரசே! எனக்கூவி, நான்
வாடாது வாடுமுன் முகவாட்டமுங் கண்டு
வாடாவெ னக்கருணை நீ
வைத்திடா வண்ணமே சங்கேத மாவிந்த
வன்மையை வளப்பித்த தார்?
தேடாது தேடுவார் தேட்டற்ற தேட்டமே!
தேடரிய சத்தாகி, யென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே!
தேசோன்ம யானந்த மே!

† (i) பாகத்தி னாற்கவிதை பாடிப்ப டிக்கவோ
பக்திநெறி யில்லைவே த
பாராய ணப்பனுவல், மூவர்செய் பனுவலது
பகரவோ, இசையுமில் லை.
யோகத்தி லேசிறிது முயலவென் றால்,தேக
மொவ்வாதிவ் வூண்வெறுத் தால்,
உயிர்வெறுத் திடலொக்கு மல்லாது, கிரியைகளு
பாயத்தி னாற்செய்ய வோ,

உபந்நியாசங்களைக் கேட்டு மேலான பயனுற்றனர். இவர் பிரசங்கங்கள்* கல்விமான்களுக்கு மாத்திர மல்லாமல்† பாமரஜனங்களுக்கும் பயன்பட்டன. ஏனெனில் இவர்

---

மோகத்தி லேசிறிது மொழியவிலை, மெய்ஞ்ஞான
மோனத்தி னிற்கவென் றால்
முற்றாது பரிபாக சத்திகள னேக, நின்
மூதறிவி லேயெழுந் த
தாகத்தி லேவாய்க்கும் அமிர்தப்ர வாகமே!
தன்னந்த னிப்பெருமை யே
சர்வபரி பூரண அ கண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவ மே.

(ii) பாடுகின்ற பனுவலோர்கள், தேடுகின்ற செல்வமே!

(iii) பாடிப் படித்துலகிற் பாராட்டி நிற்பதற்கோ,
தேடி யெனையடிமை சேர்த்தாய் பராபரமே?

(vi) பாட்டுக்கோ, அன்பினுக்கோ, பத்திக்கோ, அன்பர்தங்கள்
நீட்டுக்கெல் லாங்குறுக நின்றாய் பராபரமே.

* சந்ததமும், வேதமொழி யாதொன்று பற்றினது
தான்வந்து முற்றுமென லால்,
சகமீதி ருந்தாலும், மரணமுண் டென்பது
சதாநிஷ்டர் நினைவதில் லை;
சிந்தையறி யார்க்கிது போதிப்ப தல்லவே,
செப்பினும் வெகுதர்க்க மாம்.
திவ்யகுண மார்கண்டர் சுகராதி முனிவோர்கள்
சித்தாந்த நித்யரல ரோ?
இந்த்ராதி தேவதைகள், பிரமாதி கடவுளர்,
இருக்காதி வேதமுனி வர்,
எண்ணரிய கணநாதர், நவநாத சித்தர்கள்,
இரவிமதி யாதியோர் கள்,
கந்தருவர், கின்னரர்கண், மற்றைக ளியாவரும்
கைகுவித் திடுதெய்வ மே!
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணாக ரக்கடவு ளே!

† அடுத்த இயல்பாக, ஒன்றையான் பகர்வதல்லால்
தொடுத்ததொன்றை யான்வேண்டிச் சொல்லேன் பராபரமே

மருதம், நெய்தல்,* பாலை, குறிஞ்சி, முல்லை யென்னும் ஐவகை நிலங்களிலுள்ள† மிருகங்கள்‡

---

* (i) உடைக்கப்பல் கப்பலாய்த் திரையாழி
யூடு செலுமோ?......சுகவாரியே.

(ii) உடல்குழைய, வென்பெலா நெக்குருக, விழிநீர்கள்
ஊற்றென வெதும்பி யூற்ற,
ஊசிகாந் தத்தினைக் கண்டணுகல் போலவே
ஒருறவு முன்னி யுன்னிப்
படபடென நெஞ்சம்ப தைத்துண்ண டுக்குறப்,
பாடியா டிக்குதித் துப்
பனிமதிமு கத்திலே, நிலவனைய புன்னகை
பரப்பியார்த் தார்த்தெழுந் து,
மடலவிழு மலரனைய கைவிரித் துக்கூப்பி
வானே,ய வானிவின் ப
மழையே,ம ழைத்தாரை வெள்ளமே, நீடுழி
வாழியென வாழ்த்துயேத் தும்
கட்ன்மடை திறந்தனைய அன்பரன் புக்கெளியை
கன்னெஞ்ச னுக்கெளியையோ?
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணாக ரக்கடவுளே!

† (1) திண்ணியநெஞ் சப்பறவை சிக்கக் குழற் காட்டில்
கண்ணிவைப்போர் மாயம் கடக்குநா ளென்றோ?
(2) பைம்பயிரை நாடுமுன்போல் பார்பூத்த பைங்கொடிசேர்
செம்பயிரை நாடித் திகைத்தேன் நான் பைங்கிளியே
(3) வைத்தசுவர் அலம்பின் மண்போமோ? மாயையினோர்க்கு
எத்தனைபோ தித்துமென்னும்? எந்தை பராபரமே!
(4) நாடுநகரும், நிசா னட்டிய பாளையமும்,
ஈடுசெயு மோ, முடிவி லெந்தாய் பராபரமே.
(5) "சோராத ஆசையாய் காணுறு வானதி சுரந்ததென மேலு
[மார்ப்ப"
(6) "மருமலர்ச் சோலை செறி நன்னீழல் மலையாதி மன்னு
[முனிவர்"

‡ மத்தமத கரிமுகிற் குலமென்ன நின்றிலகு
வாயிலுடன் மதியகடு தோய்
மாடகூ டச்சிகர மொய்த்தசந் திரகாந்த
மணிமேடை யுச்சிமீ து

*பறவைகள், புழுக்கள்† ஸ்தாவரங்கள், நதி முதலிய தோற்றங்கள், மனிதர்கள் இவர்கள் நிலமையை பிரியத்துடன்கண்டு உவந்தனராதலால் எவ்விஷயம் எவற்கு போதிப்பினும் அவ்விஷயம் அவ்வவர் மனதை ஊடுருவி யிருதயத்திற்குச்‡ செல்லும். பின்னும் இவர் சிறப்பு விரிப்பானேன். அருளையர்தொகுத்துச்சுட்டியவாறுஇவர்,

" நேசயோ கத்துறு நிருபரெல் லாம்தொழும்
இராஜயோ கத்திறை இராஜ யோகத்தான்.
பொறுமை, தெளிவு, புனித ஆசாரம்
மறுவிலா வண்மை வார மியற்கை

---

முத்தமிழ் முழக்கமுடன் முத்தநகை யார்களொடு
முத்துமுத் தாய்ச்சுலா வி,
மோகத்தி ருந்துமென் ? யோகத்தி னிலைநின்று
மூச்சைப்பிடித்தடைத் து,
கைத்தல நகப்படை விரித்தபுலி சிங்கமோடு
காடிநுழை நூழைகோண் ட
கானமலை யுச்சியிற் குகையூ டிருந்துமென் ?
காதலா மலக மென்னச்
சத்தமற மோனநிலை பெற்றவர்க ளுய்வர்காண்
சனகாதி துணிவிதன் றோ ?
சர்வபரி பூரண அகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவ மே.

* " சருகுசல பக்ஷணிக ளொருகோடி யல்லாற்
பறைவகள் சகோரபக்ஷிகள்போல வே
தவளநில வொழுகமிர்த தாரையுண் டழியாத
தன்மையா னந்தகோ டி."

† "பற்றவெகு விதமாகி யொன்றைவிட் டொன்றனைப்
பற்றியுழல் கிருமிபோல
பாழ்ஞ்சிந்தை பெற்றநான்."

‡ " இப்பிறவி யென்னுமோர் இருட்கடலின் மூழ்கிநான் "
என்னும் பாடலை நோக்குக.

தண்ணமர் சாந்தம், தயங்கிய கீர்த்தி,
எண்ணெண் கலையயி லிணையிலாக் கல்வி,
நல்ல விரக்க நடுநிலை சத்தியம்,
இல்லையென் ஞமல் எவர்க்கும் தரும்கொடை,
நற்குண னெல்லா நண்ணிய பெருந்தகை,
சிற்குண வாரி திருவருட் செல்வன்."

என யாவராலும் புகழப் பெற்றனர்.

---

## நான்காம் அத்தியாயம்

### தாயுமானவர் கவியின் சிறப்பு (1) கவியின் பகுதி

தமிழ் நாட்டில் கவீஸ்வரர்களாய் விளங்குவோர் நமதிலக்கியத்தில் ஆசு, சித்திரம், மதுரம், விஸ்தாரம் என்னும் நான்கு வகுப்பினராவர். ஆசுகவி என்பது, காளமேகப் புலவன்போல், கேட்டதை கேட்டவாறு தாமதமின்றி உடனே வேண்டிய மாதிரி பாவை பாடுவது. சித்திரகவி என்பது சக்கரம், பதுமம், ரதம், நாகம் முதலிய உருவங்களை எழுதி அவற்றின் அங்கங்களில் ஒரு பாவை அமைப்பது. மதுரகவி என்பது மிகவும் இனிய ஓசை உண்டாக்கும் பாவாம். ஆயிரக்கணக்காய் பாடக்கூடிய கவியரசை விஸ்தாரகவி யென்பார். இந் நான்கு வகுப்பில் தாயுமானவர் எதன்பாற் படுவரென ஆராய்வோமாக:— தாயுமானவர் "பாகமோ பெறவுனைப் பாடவறியேன்" என்று தன்னை இகழ்ந்து கூறினும், இவர் * ஆசு

---

* என்றும் கருணைபெற்ற இன்பத் தபோதனர் சொல்
சென்ற சென்ற திக்கனைத்தும் செல்லும் பராபரமே.

கவியாய் பெரும்பாலும்* பாக்களைப் பாடியதாய் அவர் பாடல்கள் காணப்படுகின்றன. முதல் முதல் ஆசுகவி யாய்ப் பாடும்போ துண்டாகும் அநுபவம்† அதாவது மலையினின்று விழும் அருவிக் கூட்டங்கள் அடிவாரத் தில் ஒருங்குசேர்ந்து வெள்ளம் புரளுவதுபோல், அபிப் பிராயங்களின் திரட்சியின் ஓட்டம் அதிவேகமாய்ச்

---

* கூடியநின் சீரடியார் கூட்டமென்றே வாய்க்குமென
வாடியவென் நெஞ்சமுகம் வாட்டமுநீ கண்டிலையோ?
தேடியநின் சீருளைத் திக்கனைத்தும் கைகுவித்து
பாடியநான் கண்டாய பதியே பராபரமே?

† எவ்வு யிர்த்திரளு முலகி லென்னுயிர்
எனக்கு ழைக்குருகி னன்மையாய்,
இதமு ரைப்பவென தென்ற யாவையு
மெடுத்தெ திர்ந்துமத யானைபோல்,
கவ்வை யற்றநடை பயில வன்பரடி
கண்ட தேயருளின் வடிவமாக்
கண்ட யாவையும கண்ட மென்னவிரு
கைகு வித்துமலர் தூவியே,
பவ்வ வெண்டிரைகொ டுத்த தண்டரளம்
விழியு தீர்ப்பமொழி தளறியே,
பாடி யாடியுஞ டைந்து டைந்தெழுது
பாவையொத் தசைத லின்றியே
திவ்ய அன்புருவ மாகி, அன்பரொடும்
இன்ப வீட்டினிலி ருப்பனோ?
தெரிவ தற்கரிய பிரம மேயமல
சிற்சு கோதயவி லாசமே!

சொற்கள் தடுமாறும்படி ஓடுவது, இவர் சுவாநுபவத்தில் கண்டிருக்கலாம். நாம் சாதாரணமாய்ப் படிக்கும்போதும் அவர் பாடல்களில் சில நம்மையும் அறியாமல் வேகமாய்ஓடுகிறதால், பாடினவர் எவ்வாறு பாடியிருப்பாரென்பதும், இவர் ஆசுகவியல்லவா என்பதும் அநுமானிக்கலாம்.

இவர் சித்திர கவியா? இவர் பாக்களில் எவை சித்திரத்திலடக்கக்கூடு மென்பது பின்னிட்டுவரும்ஆராய்ச்சியின்பாற்பட்டது. ஆயினும் பாக்களில் வெளிச்சித்திரமான எண், சொற்* சித்திரங்கள் இவர் பாக்களில் ஒவ்வோரிடங்களிற் காணலாம். இவர் சித்திரங்களில் அடக்கும் கவிகளைப் பாடினரோ இல்லையோ எனினும், இவர் சித்திரங்களை மனதில் எழுப்பும் கவிகளைப் பலவாறு பாடியுள்ளார். ஐந்திணையிலுள்ள இயற்கைத் தோற்றங்களை இவர் பாடல்கள் ஒவ்வோரிடங்களில் சித்திரிக்கின்றன. அவை தாயுமானவர் கலைஞானங்களைக் கூறுமிடத்தில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் சித்திரக்கவியென்னும் மொழிக்கு விலாசமானபொருள் அங்கீகரிப்பின் இவரைச் சித்திரக்கவி யெனல், குற்றமன்று.

---

* கருணைமொழி சிறிதில்லேன் ஈதலில்லேன்
கண்ணீர்க்கம் பலையேன்றன் கருத்துக் கேற்க
ஒருபொழுதும் பெற்றறியேன் என்னை யாளும்
ஒருவா! உன் அடிமைநான் ஒருத்தனுக்கே
இருவினையும், முக்குணமும், கரண நான்கும்,
இடர்செயும் ஐம்புலனும், காமாதி ஆறும்,
வரவாவும் ஏழைக்கோர் எட்டாதான
மதத்தொடுவெந் தெதிர்த்தநவ வடிவமன்றே!

இவர் மதுரகவி யென்பதற்கு யாவரும் எதிர்மறை கூறுர்.* இவர் பாடல்களில் உள்ளவாக்கிய இனிமையால், தமிழிலுள்ள மற்றக் கவிவாணர் நூல்களினின்று இவர் பாடல்களைப்போல் பண்டித பாமர ஜனங்கள் யாவரும் அவ்வளவு கையாள் வதில்லை. தாயுமானவர் பாடல்களில் 100க்கு 10க்கு குறையாமல் தொடர்மொழிகளும் வாக்கியங்களும் தமிழ்நாட்டில் உலகவழக்கில் வழங்குகின்றன. தாயுமானவரைப்போல் மற்றத் தமிழ்க்கவிகள் பண்டிதர்களையும் பாமரர்களையும் ஒருசமமாய் இன்பம் அனுபவிக்கச் செய்யா. ஆகையால் இவர் பாக்கள் அமிர்தத்திற்கு ஒப்பான மதுரகவிகள் என்னல் பொருந்தாதோ?

தாயுமானவர் பாடிய பாடல் மொத்தம் 1431 நமக்குக் கிடைத்துள்ளன. இன்னும் எத்தனை நமது கைக்குக் கிட்டாமல் அழிந்து போயினவோ தெரியாது. சற்றேறக்குறைய 2000பாடல்கள் தாயுமானவர் எழுதியிருக்கலாம். நமக்குக் கிடைத்திருக்கிற மிகவும் அற்புதமான இந்த 1431 கவிகளே அவரை விஸ்தாரகவி யென்றழைப்பதற்கு போதாவோ? இவற்றுள் சில, பன்னிரு சீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தங்கள். அத்தகைய பெரிய சந்தவிருத்தங்கள் பலவுள. ஆநந்தக்களிப்பு அகவல், வண்ணம் இவை மிகவும் அகண்ட பாடல்கள். வெண்பாக்கள், குறள்வெண்செந்துறை, கலித்துறை முதலியன, பாடினகாலங்களில் ஒன்றிரண்டாய்ப்பாடாமல்

---

* ஆடுவதும் பாடுவதும் ஆநந்தமாக, நின்னைத்
தேடுவதும் நின்னன்பர் செய்கை பராபரமே.

* ஒரேழுச்சாய் மழைபெய்ததுபோல் பலவற்றைத் தாயுமானவர் பாடியிருக்கின்றனர். ஆகையால் தமிழில் இவர் சிறந்த வொரு விஸ்தார கவியே.

## தாயுமானவர் கவியின் சிறப்பு (தொடர்ச்சி)

### (2) அவர் கவியும் கலைஞானமும்.

கவியெனப்படுவது யாது? சீர், தளை, மோனை, எதுகைகளால் யாத்த வாக்கியங்கள் கவியாகுமா? ஆங்கிலேயத்திலும், பதினெட்டாம் நூற்றாண்டில் கவீஸ்வரர்களென்று பெயர்பெற்ற போப், டிரைடன் முதலானோர் கவிகளா, என்னும் வாக்குவாதம் நாளைக்கும் காணலாம். ஒரு பழத்தின் இனிமை உருவத்தால் உண்டாகாமல், ருசியால் உண்டாவதுபோல் கவியும் சீர் தளை முதலிய யாப்பிலக்கணக்கருவிகளால் செய்யப்படுவதன்று. அம்மாதிரி யாப்பிலக்கணக் கருவிகள்செயற்கையாலான கவி, கலைஞான ரசம் கூடியமனோபாவம் நிறையாவிடின், மண்ணால் செய்யப்பட்டு, வர்ணங்கள் தக்கவாறுபெற்ற பழம்போல், உண்பதற்குஉதவாது. ஆன்றோர் இதுபற்றியேகவித்தன்மைகொடுப்பவள் கலை மகள் என்று, "ஆய கலைகள் அறுபத்தினான்கினையும், ஏய உணர்விக்கும் என்னம்மை" என்

* பன்மாலைத் திரளிருக்கத், தமையுணர்ந் தோர்
பாமாலைக் கேநீதான் பட்ச மென்று,
நன்மாலை யாவெடுத்துச், சொன்னார் நல்லோர்.
நலமறிந்து கல்லாத நானும் சொன்னேன்,
சொன்மாலை மாலையாக் கண்ணீர் சோரத்
தொண்டனேன் எந்நாளும் துதித்து நிற்பேன்.
என்மாலை அறிந்திங்கே வாவா யென்றே,
எனைக்கலப்பாய் திருக்கருணை எய்பி ரானே!

றூர். கலைஞானரசம் உண்டிராதகவிராயன், காரிகை கற்று*
கவிபாடினவனேயன்றி கலைமக ளருள்பெற்றவனல்லன்.

தற்காலத்தில் கலைகள் அறுபத்திநான்கா யிராமல், அறுபத்தி நாலாயிரமா யிருக்கின்றன. ஆயினும் எல்லாக் கலைகளும் இரண்டு வகுப்பில் அடக்கலாம். அஃதாவது மனத்தொழில் கலைகளான மிருதுகலைக ளென்றும், கைத்தொழில் கலைகளான கடினகலைக ளென்றும் இரு விதங்களாம். சித்திரம், சங்கீதம் முதலியன கைத்தொழில் குறைந்தும் மனத்தொழில் அதிகரித்து முள்ளன, முதற் பகுதியின் பாற்படும். சிற்பம், போகடம் முதலியன, கைத் தொழிலின் கடினவேலைகள் கொள்ளுதலால் மனத் தொழிலிருந்தும் கடினகலைகளென கலைஞானிகள் இரண்டாம் வகுப்பாய்க் கூறுவார்.

கலைகளின் சிருஷ்டிகளையும் கவிகளின் சிருஷ்டிகளையும் உயிர்பெறச் செய்வது மனோபாவ ஒளியாம், மனோபாவம் இன்றேல் கவி, கபியாய் விளங்கும்; சித்திரம் பிராணனுடன் விளங்காமல் பிணம்போல் காணப்படும். உருவத்தில் ஜீவனைக் காட்டுவது மாத்திரமன்றி, நற்குண நற்செய்கைகள் முகத்தொளியில் காட்டுவதே சித்திரம். சிற்பத்திலும் அவ்வாறே. ஒரு தேவதாசியைச் சித்திரிப்பது கடினமன்று; கற்புடைய மாதை எழுவது மிகவும் கடினமான தொழில். ஏனெனில் முன்னதன் மாதிரி எங்கும் கிடைக்கும், பின்னதன் மாதிரி கிடைப்பதரிது. கற்புடையாளைச் சித்திரிப்பதிலும் கஷ்டம், சித்திரத்திலும் சிற்பத்திலு மில்லை. தெய்வத்தன்மை சித்திரத்தில் காட்டமுயலுதல் காணாத வஸ்துவை எழுதுவது

* "காரிகை கற்றுக் கவிபாடுதலினும்,
பேரிகை அடித்துப் பிழைத்தல் நன்றாம்."

போலாம்* மடப்பள்ளி அய்யங்கார், பஞ்சாயுதமும், நாலுகைகளும், பக்கத்தில் இரண்டு ஸ்திரீகளும் அமையப் பெற்றாலும், பச்சைவர்ணம் பூசிக்கொண்டாலும், மஹா விஷ்ணு வாவாரோ? கபடநாடக சூத்திராவதாரியாகிய பரமபுருஷன் முகஒளிக்காட்டக் கூடிய பொருள், உலகத்தில் சித்திர சாஸ்திரி கண்டிருப்பானாயின், அவன் அதை யெழுதமுடியும். அதை விட்டு, மனம்போன போக்காய்ப் புராண நடைக்குச் சரிவா, ஒரு படம் எழுதி, அதைப் பரமாத்துமா வென்பது, அண்டைவீட்டுக்காரன் படத்தை வீட்டில் வைத்துக்கொண்டு, "அப்பா, இப்படித்தான் இருப்பார்" என்பது போலாம். ஆகையால் சித்திரம் முதலிய கலைகளில், உண்மை விளக்குவது எங்ஙனம் இன்றியமையாததோ, அங்ஙனமே, குற்றமற்றக் கவி பாடுதலிலும் மருளின்றி பொருள் நிசரூபத்துடன் வெளிவரச் செய்தல் இன்றியமையாததாம்.

தாயுமானவர், கலைஞானம் பெற்றிருந்தாரா, இருப்பின் அது அவர் பாடல்களில் காணக்கூடுமா, என ஆராய்வோமாக:—

(i) இசைஞானம் :— கவித்திறமையைச் சிறக்கச் செய்யும் கலைகளில் முதன்மையதாய் விளங்குவது சங்கீதம். இதையறிந்தே, ஆன்றோர் முத்தமிழையும் கற்க

---

* கோவண முடுத்த வாறும், கோளர வசைத்த வாறும்,
தீவணச் சாம்பல் பூசித் திருவுரு இருந்த வாறும்,
பூவணக் கிழவ னாரைப் புலியுரி அரைய னாரை,
ஏவணச் சிலையி னாரை, யாவரே எழுது வாரே?

திருநாவுக்கரசு

வேண்டு மென்றனர். இசைத்தமிழ் இலக்கணம், யாப்பிலக்கணரூபமாய்த் திருந்தச்செய்தவர், திருஞானசம்பந்தருக்கு முந்தியவர் நமதிலக்கியத்தில்லை. ஆரியம் பயின்று, அப்பாஷையிலுள்ள சந்தங்களை தமிழில் பொருந்தச் செய்தவர்களுள், சம்பந்தரும் தாயுமானவருமே இசையின் நுட்பங்களும், அவற்றின் பேதங்களும், கேட்போரிடத்து உண்டாக்குவிக்கும் பயனை யறிந்தவர்கள். அதனால் மாத்திரை அளவும், சீர்கள் பரிவர்த்தனையும், கவியின் ஒலியிசைக்குப் பொருந்துமாறு, மாறுதல் செய்து எழுத்துக்களின் சையோகவிதிகள், தொல்காப்பியர் ஏற்படுத்திய சட்டங்களுக்கு முரணாக, புது இலக்கியக் கவிகளுக்குத் தக்க புது இலக்கணவிதிகள் வெளிப்படையாய் கூறாமல், உபயோகிக்கலாயினர். அஃதென்னையெனில்:—

நன்னூல் சூத்திரமாகிய "மூன்றுயிரளபிரண்டாம் நெடிலொன்றே, குறிலோடையளக் குறுக்க, மொற்றளபு, அரை யொற்று, இ, உக் குறுக்க, மாய்தம், கால், குறண் மஃகான் ஆய்தமாத்திரை." என்னும் சட்டப்படி நெடிலுக்கு இரண்டுமாத்திரையும், குறிலுக்கு ஒன்றும் ஒற்றுக்கு அரையுமாகும். அவ்வளவின் வண்ணம் "ஆம்" என்பதற்கு "அம்" என்பதற்கும் ($2\frac{1}{2} — 1\frac{1}{2}$)ஒரு மாத்திரை வித்தியாசமாகும். இசையில், இவ்விதி பொருந்தாதென்பதும், பவணந்தி* கூறுகிறார். நூதன இலக்கியமான சந்தவிருத்தப்பாக்களும், மற்றும் சில விருத்தங்

* "ஆவியு மொற்றும், அளவிறந் திசைதலும்
மேவும், இசை, விளி, பண்டமாற்றுநின்"—நன்னூல்.

களும், புராதன இலக்கணங்களுக்குக் *கட்டுப்படா. நெடில் தனியே நின்றாலும், ஒற்றுடன் கூடினாலும், இசையில் இரண்டு மாத்திரையளவே யாகும். † ஒற்றுடன் கூடிய குறில் இரண்டு மாத்திரையாம். தனிக்குறிலே ஒருமாத்திரை பெறப்பாலதெனை அளவுகண்டு, சந்தவிருத்தங்கள் பாடலாயின.

இதன்றியும் சந்தவிருத்தங்களுக்குச் ‡ செய்யுள் விகாரங்கள் (1) அவசியமில்லை. நீட்டல் விகாரமின்றியே

---

* "இலக்கிய மின்றேல் இலக்கண மின்றாம்;
எள்ளின் றாகில் எண்ணெயு மின்றாம்".
"இலக்கியம் கண்டதற் கிலக்கண மியம்பலின்"
எனவும் கூறியுள்ளார்.

† குற்றுயிர் தனக்குமிரு மாத்திரை குறித்தார்
ஒற்றதை யடுப்பின், உயர் வொன்றுதனி நிற்பின்,
மற்றவை தனக்குமிரு மாத்திரை வகுத்தார்
ஒற்றதை யடுப்பினும், உணர்ந்தறிய வல்லர். "
—விருத்தப்பாவியல்—

"நீண்டவுயிர், ஒற்றுடைய நீண்டிலதி ரண்டும்
நீண்டகுறி லே, தனிநி கழ்ந்தகுறில் ஒன்றே" என்றனர்.

‡ "சீரியலி னலமைவ தீந்தமிழ் விருத்தம்.
ஆரியம் அறைந்த உயர்சந்த வயிதான
வாரியது, மாத்திரையி னலமையு மென்ப.
பாரியலமைந்தபது மத்திருவணங்கே"—விருத்தப்பாவியல்

(1) " அங்கிங்கெ னாதபடி யெங்கும்ப்ர காசமாய்
ஆனந்த பூர்த்தியா கி "

என்பதில் இவ்வரையடியின் யாப்பிலக்கணம் ஐந்து மாத்திரைச் சீர்கள் ஆறும், ஈற்றில் ஒரு நெட்டெழுத்து. அல்லது ஐந்துமாத்திரைச் சீரைந்தும் ஏழுமாத்திரைச்சீர் இறுதியிலும் பெற்ற அறுசீர்ச்சந்தவிருத்த விலக்கணமாம். அது இரட்டி பன்னிருசீர்ச் சந்தவிருத்தமாயிற்று. "கி" என்பது இசையில் பாடும்போது "கி இ இ" என வொலிப்பதாலும், நீட்டல் விகாரம் "கீ" என்னும் நீண்ட சப்த முண்டாக்குவதாலும் செய்யுள் விகாரங்களால், விருத்தங்கள் விகாரப்படுவதில்லை.

சந்த விருத்தங்கள் பாடும்போது இசையில் குற்றெழுத்து, நெடில் உருவம் பெறுமல் அதன் அளவு மாத்திரம் பெறும். (2) அங்ஙனமே இசைக்கு ஏற்ப குற்றெழுத்துக்கள் தொக்கியவாறு பாடுதலுமுண்டு.

தொல்காப்பியம் முதலிய யாப்பிலக்கணங்கள் விருத்தங்களுக்குப் பொருந்தாவாகையால், தளையைக் கவனிக்க வேண்டிய அவசியமில்லை. ஆகையால் விளச்சீர் வர வேண்டிய இடங்களில் மாங்காய்ச்சீரும், இசைக்குப் பொருந்தும். காய்ச்சீருக்குப் பதிலாய் நீண்ட விளச்சீரும் உபயோகமாகும். ஆனல் நீண்ட விளத்துடன் காய் சேராது *. அப்படிச் சேரின் விருத்தத்தின் இசை கெட்டுப்போம்.

இவ்வித ஆரியச் சந்த நுட்பங்களை நன்கறிந்தே, தாயுமானவர் சந்தவிருத்தங்கள் பாடியுள்ளார். (3) ஒரு குற்றமும் நேராமல், அவர் பாக்களில் சீர்கள் அமையப் பெற்றதால், தேனருவி ஓடுவதுபோல், அவர் விருத்தங்கள் சங்கீதத்தில் ஓடலாயின. நமது பாஷை அறிந்

---

(2) "நில்லாது தேகமெனு நினைவுண்டு, தேகநிலை
நின்றிடவு மௌனியாகி,"
என்பதையும் நோக்குக.

* வெண்பாவில் "விளங்காய்" போல் விளம் காய்ச்சீர் வரலாம்; விருத்தத்தில் வரலாகாது. இதுவும் வெண்பா விருத்த இலக்கணங்களிலுள்ள பேதமாம்.

(3) "பண்ணுரு மிசையினெடு பாடிப்படித்தருள்
பான்மைநெறி நின்று,தவ ரூப
பக்குவநீ சேஷராய், நெக்குநெக் குருகிப்,
பணிந்தெழுந் திருகைக்கூப் பி"

தோர் மாத்திரமன்றி, தமிழ்ப்பாஷை யறியாத சங்கீதப் புலவர்களும், இவர் பாடல்களைப் பொருளறியாமலே நாதம் மாத்திரம் உணர்ந்து, பலவித கருவிகளில் அமைத்துப் பாடுகின்றனர்.

## (ii) உருவ ஞானம்:—

சங்கீதம் செவிக்கு இனிமை கொடுப்பதுபோல், கண்ணிற்கு இனியவை காட்டுவன சிற்பம் சித்திரம் முதலிய கலைகள். ஓவியக்கலையின் இரசத்தைக் கண்டறிந்த தாயுமானவர், தமது தோத்திரங்களில் இரட்டுற மொழிவதுபோல், உருவங்கள் அமைத்திருக்கின்றனர். சோலையில் காணக்கூடிய தோற்றங்கள்,* தவசிகள் வசிக்கும்காடு, அதில் வாழ்வன† மலைகள்‡ மேகம், கடல்,|| மழை, கதிரவன், நிலா, கானல்§ இவைகளையும் ஆங்காங்கு

---

* "மடலவிழு மலரனைய கைவிரித் துக்கூப்பி",
"தேன்முகம் பிலிற்றும் பைந்தாட் செய்யபங் கயம"

† "இனம்பிரிந்த மான்போல்நான் இடையா வண்ணம்"

‡ "மலைமலையாங் காட்சிகண்கா ணுமை யாதி"

|| (1) "ஆறனைத்தும் புகும்கடல்போல், சமய கோடி
யத்தனையும் தொடர்ந்துபுகு மாதி நட்பே"

(2) "திரையில்லாக் கடல்போல சலனம் தீர்ந்து"

§பாராதி யண்டமெலாம் படர்கானற் சலம்போல்
பார்த்தனையே முடிவினின்று பாரேதுதா னின்றது?
ஆராலு மறியாத சத்தன்றோ அதுவாய்
அங்கிருநீ எங்கிருந்தும் அதுவாவை கண்டாய்
பூராய மாகவுநீ மற்றொன்றை விரித்துப்
புலம்பாதே சஞ்சலமாப் புத்தியைநாட் டாதே
ஓராதே ஒன்றையுநீ முன்னிலைவை யாதே
உள்ளபடி முடியுமெலாம் உள்ளபடிக் காணே!

உவமையாகக் காட்டுங்காலையில், நமக்கு எதிரில் ஒருபடம் * நிற்பது போல் பாடுகின்றார். இதன்றியும், சித்திரத்திலும், சிற்பத்திலும் கண் அமைப்பதுவே மிகவும் அருமையான திறமை. ஒருமுகத்தை நோக்கும் பதுமை பலமுகத்திலும் பார்வை அமைந்திருப்பதே சித்திரி, அல்லது சிற்பியின் கலையின் சிறப்பு.* அகத்தில், அர்தநாரீஸ்வரரை அமைக்கும் தியான சித்திரத்தை, இப்பாவால் காணலாம்:—

"ஆணும் பெண்ணு மதுவெனும் பான்மையும்,
பூணும் கோலம் பொருந்தியு ணிற்கவே."
"என்று முன்னை, யிதய வெளிக்குளே
துன்ற வைத்தன னே,யருட் சோதிநீ
நின்ற நன்மை நிலைக்கென்னை நேர்மையாம்
நன்று தீதற வைத்த நடுவதே."

---

* பன்மு கச்சமய நெறிப டைத்தவரு,
மியாங்க ளேகடவு ளென்றிடும்
பாத கத்தவரும், வாத தர்க்கமிடு
படிற ருந்,தலை வணங்கிடத்
தன்மு கத்திலுயிர் வரவ ழைக்குமெம
தரும னும்பகடு மேய்க்கியாய்
தனியி ருப்ப,வட நீழ லாடுவவர்
சநக னாதிமுநி வோர்கடம்
சொன்ம யக்கமது தீர, வங்கைகொடு
மோன ஞானமது ணர்த்தியே,
சுத்த நித்தவரு ளியல்ப தாகவுள
சோம சேகர கிர்பாளுவாய்த்
தென்மு கத்தின்முக மாயி ருந்தகோலு,
எம்மு கத்தினும்வ ணங்குவேன்;
தெரிவ தற்கரிய பிரம மே!யமல
சிற்சு கோதயவி லாசமே.!

# ஐந்தாம் அத்தியாயம்.

## தாயுமானவர் பாடல்களின் இலக்கியச் சிறப்பு.

தமிழிலக்கியத்தில், வெண்பாவில் புகழேந்தியும்,* விருத்தத்தில் கம்பனும், நிகரற்றவரென்பது புலவோர் கொள்கை. சங்கத்தார் காலத்தினின்று பலர் வெண்பா எழுதியுள்ளார். பாரதம்பாடும்பெருந்தேவனார், நக்கீரர், முதலானோர் வெண்பாக்களினும், புகழேந்தி பாடிய நளவெண்பா சிறந்ததென்பார்கள். அவ்வாறே, கம்பனுக்கு முன்னும், பின்னும், பலர் விருத்தங்கள் எழுதியிருக்க, கம்பனே விருத்தத்தில் உயர்ந்தவனென்பானேன்? இவற்றை முறையே ஆராய்ந்து, அவ்வவர் கவிகளைத் தாயுமானவர் பாடல்களுடன் சீர்தூக்குவோமாக :—

### (i) புகழேந்தியும் தாயுமானவரும்

புகழேந்தியின் வெண்பா, சொல்நயத்திற்குத் தக்கவாறே, பொருள்நயம் அமையப்பெற்றது. திருவள்ளுவர் நடைபோல் மிகவும் சுருங்கச் சொல்லி, மகத்தாகிய பொருள்களைத் தம் வெண்பாவில் விளங்கவைப்பதுடன்,

---

* வெண்பாவிற் புகழேந்தி, பரணிக்கோர்
சயங்கொண்டான், விருத்த மென்னும்
வொண்பாவி லுயர்கம்பன்,
கோவையுலா வந்தாதி ஒட்டைக் கூத்தன்,
கண்பாய கலம்பகத்திற் கிரட்டையர்கள்,
வசைபாடக் காள மேகம்,
பண்பாய பகர்சந்தம் படிகாச
லாதொருவர் பாடொ ணாதே."

புகழேந்தியின் பாக்கள் அவர் மனோபாவத்திற்குத் தக்க வாறே ஒலியும் அமையப்பெறும். தாயுமானவரும் வெண் பாக்கள் பாடியிருக்கின்றனர். அவற்றுள் நமக்கு 23 வெண் பாக்கள் கிடைத்திருக்கின்றன. நளவெண்பாவும், தாயு மானவர் வெண்பாவும், விஷயங்களில் வேறுபின. ஒன்று லௌகிகம், மற்றொன்று வைதிகம். ஆகையால், சற் றேறக்குறைய ஒரேவிதமான அபிப்பிராயங்கள் முறையே இருவர்களும் கூறிய பாக்களை ஒத்திட்டுப்பார்ப்போ மாக :—

"மேலாடை வீழ்ந்த தெடு''வென்று லவ்வளவில்,
நாலாறு காதம் நடந்ததே —'தோலாமை
மேற்கொண்ட னேறிவர வெம்மைக் கலிச்சூதின்
மாற்கொண்டான் கோல்கொண்ட மா."

— நளவெண்பா.

"குருவாகித் தண்ணருளைக் கூறுமுன்னே, மோன
உருநீ டுயிர்பொருளு மொக்கத் — தருதியென
வாங்கினையே,வேறுமுண் மை வைத்திடவும்,கேட்டிடவும்,
ஈங்கொருவ ருண்டோ வினி?"

—தாயுமானவர்.

## மறுபடியும்

காதலியைக் காரிருளிற் கானகத்தே விட்டகன்ற
பாதகனைப் பார்க்கப் படாதன்றோ, — காதம்
அளிக்கின்ற ஆழிவா ழாங்கலவ னேடி
ஒளிக்கின்ற தென்னோ? உரை"

—என்னும் புகழேந்தியின் பாவுடன்,

தொல்லைவினைக் கீடாய் சுழல்கின்ற நானொருவன்,
எல்லையிலா நின்கருணை யெய்துவனோ? — வல்லவனும்,
மோன குருவே! முழுதினையும் தானுணர்ந்த
ஞான குருவே! நவில்."

—என்னும் தாயுமானவர் பாவை ஒத்திட்டுப் பார்க்க. எடுத்துக்காட்டிய உதாரணங்களில், தாயுமானவர் வெண் பாக்கள், புகழேந்தி வெண்பாக்களுக்குச் சற்றும் பின் வாங்கியவாய்க் காணப்படவில்லை.

## (ii) கம்பனும் தாயுமானவரும்

"கல்வியிற் பெரியன் கம்பன்," என்று நாம் கேட்டிருக் கின்றோம். ஒரு தேனீயானது, அணுக்கள் ரூபமாய் ஒவ்வொரு மலரிலுள்ள தேனைக் கொண்டுவந்து தன் வாயால் தேன்கூண்டு செய்வதுபோல், பல நூல்களி லுள்ள அரிய பொருள்களை மாத்திரம் தேடிச் சேர்த்துத் தனது சிருஷ்டியாய்க் கம்பன் ராமாயணம் செய்தனன் கம்பன், தான் ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொரு அகப்பை மொண்டுக்கொண்டதாய்ச் சொன்னதாகவும், ஒரு கதையுண்டு. ஒட்டைக்கூத்தர் ராமாயணம் எழுதிக் கொண்டிருக்கும்போது, கம்பர் தான் எழுதாமலே மனதில் ஒவ்வொரு படலங்களையும் எழுதி, சீர்திருத்திக்கொண்டி ருந்தாரென, கம்பராமாயண ஆராய்ச்சி செய்தோர் கூறுகி ன்றனர். இதனாலேதான் கம்பர் பாடிய மற்றைய நூல் கள், ராமாயணம் போல் சிறந்து விளங்கவில்லை.

தாயுமானவர் பாடல்களோ, எந்த அரசனிடமும் பரிசு, மதிப்பு பெறப்பாடியனவல்ல. மலையின்பேரில் பொங்கும் ஜலம், வெள்ளம் புரண்டு கீழேவிழுதல்போல்,

தாயுமானவர் மனோபாவம் பொங்கி, வெளியில் பாடல்கள் ரூபமாய் வந்தது. தாயுமானவரும், கல்வியிற் பெரியராய் நமதிலக்கியத்திலுள்ள நூலாசிரியர்கள் யாவரையும் கற்றாரெனினும், அவ்வவர்கள் இலக்கிய நடைகள், மனோபாவங்கள் பெரும்பாலும் கவனியாது, மேலோர் நடவடிக்கைகளையே கவனிப்பாராயினர். சிறந்த இலக்கியங்களான தேவாரம், திருவாசகம், திருமந்திரம், பட்டணத்துப்பிள்ளை பாடல் முதலான நூல்களின் பெருமை கூறாது, அவ்வவ்வாசிரியர்களின் குணங்களையே புகழலானார். ஆயினும், விஷயங்களில் சற்றேறக்குறைய ஒரு தன்மையாய் விளங்குவனவற்றில், தாயுமானவரும் கம்பனும் எழுதிய பாக்களை ஒத்திட்டுப் பார்ப்போமாக:—

கம்பராமாயணத்தில் கடவுள் வாழ்த்தை நோக்குவாம்.

உலகம் யாவையும், தாமுள வாக்கலும்,*
நிலைபெ றுத்தலும், நீக்கலு, நீங்கலா
அலகி லாவிளை யாடுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கே,சர ணாங்களே.

இந்தக் கவியில், நடைவிசேஷம் என்னையெனின், இதுஒரு விதக் கட்டளைக்கலிவிருத்தமாகும். அடிக்கு முதலில் உள்ள அசை நேரசையாயின் அவ்வடி பதினொரு உயிரெழுத்துக்கள் பெற்றும், நிரையசையாயின் பன்னிரண்டு

---

* "ஆக்கி,யளித்துத் துடைக்கும்,—தொழி
லத்தனை வைத்துமெள் ளத்தனை யேனும்,
தாக்கற நிற்கும் சமர்த்தன்—உள்ள
சாக்ஷியை, சிந்திக்கத் தக்கது தோழி!
சங்கர சங்கர சம்பு."

உயிரெழுத்துக்கள் பெற்றும் நான்கு சீராய் வருவதால் பெரும்பாலும்வெண்டளை பிறழாதுமிருக்கும். ஏதாகிலும் விஷயங்களைச், *சுருக்கிச் சொல்வதற்கு குறள்வெண்பா போல் இவ்விருத்தம் மிகவும் நல்ல கருவியாகும். ஆயி னும் சாதாரண கவிகள் கையாளப் புகுவதற்கு இது மிக வும் அபாயமான கருவியாம். மேல்நாட்டுத் திராட்சைப்ப ழம் போல், ரசம்நிறைந்து, ருசி அதிகரித்து, உண்போரை மயக்கத்தக்கதாய் இவ்வகை விருத்தம் இராவிடில், தனது சிற்றுருவால் பாடியவன் பெருமையைக் கெடுத்து விடக்கூடும். தாயுமானவரும் இத்தகைய பாக்கள் 78. பாடியுள்ளார். அதிலொன்று அடியில் வருமாறு:—

தக்க கேள்வியிற், சார்ந்தநற் பூமியின்
மிக்க தாகவி ளங்குமு தலொன்றே,
எக்க ணுந்தொழ யாவையும் பூத்துக்காய்த்
தொக்க நின்று,மொன் றுநிறை வானதே.

கம்பன் காட்டியதுபோல் பிரபஞ்ச உற்பத்தி, முதலி யன புராணவழியில் கூறுமலும், விளையாட்டென்று காட் டாமலும், இவலியூஷன் என்னும் (Evolution), மேல்

---

* தாயுமானவர் சுருக்கநடையைக் காண்க :—

(1) தன்மயம் சுபாவம் சுத்தம்; தண்ணருள் வடிவம் சாந்தம்
மின்மய மான வண்ட, வெளியுரு வான மூர்த்தி.
என்மய மெனக்குக் காட்டா தென்னையப கரிக்க வந்த,
சின்மய மகண்டா காரம், தக்ஷிணா மூர்த்தம்.

(2) மாடுமக்கள், சிற்றிடையார், செம்பொ னுடை,
வைத்தகன தனமேடை, மாட கூடம்,
வீடுமென்பாற் றொடர்ச்சியோ? விடைவிடாமல்
மிக்ககதி வீடன்றோ? விளம்பல் வேண்டும்.

நாட்டுத் தத்துவ ஆராய்ச்சி நடையில், தாயுமானவர் அத்வைத சாரத்தைக் காட்டுகின்றார். பின்னும், வைதீகம் அல்லது தத்துவ விசாரணைச் சம்பந்தம் நீக்கி, மற்றைய விஷயங்களில் இவர் பாடல் ஒத்திட்டுப் பார்ப்போம்:—

" கல்லா மதியே! கதிர்வா ணிலவே!
செல்லா விரவே! சிறுகா யிருளே!
எல்லா மெனையே மூனிவீர்; நினையா
வில்லா ளனையா தும்விளித் திலரே."—சுந்தரகாண்டம்.

இதற்கும், மிகவும் விரிவாய் எடுத்துரைக்கும் அடியிற் கண்ட தாயுமானவர் பாக்களுக்கும், இனிய ரசத்தில் பேதங் காணப்படவில்லை :—

"நேரேதா னிரவுபகல் கோடா வண்ணம்
நித்தம்வர, உங்களையிந் நிலைக்கே வைத்தார்
ஆரே? அங் கவர்பெருமை என்னே?" என்பேன்.
"அடிக்கின்ற காற்றே! நீ, யாராலேதான்
போராதே சுழல்கின்றாய்?" 'யென்பேன், "வந்து
பெய்கின்ற முகில்காளெம் பெருமா னும்போல்
தாராள மாக்கருணை பொழியச் செய்யும்
சாதகமென் னே? கருதிச் சாற்று" மென்பேன்.

"கருதரிய விண்ணே! நீ யெங்குமாகிக்
கலந்தனையே, உன்முடிவின் காட்சி யாக
வருபொருளெப் படியிருக்கும்? சொல்லா" யென்பேன்.
"மண்ணே! யுன் முடிவிலேது வயங்கு மாங்கே,
துரியவறி வுடைச்சேட னீற்றி லுண்மை
சொல்லானோ? சொல்"லென்பேன்; "சுருதியே! நீ
ஒருவரைப்போ லனைவருக்கு முண்மை யாமுன்
உரையன்றோ? உன்முடிவை உரைநீ," என்பேன்.

"உரையிறந்து, பெருமைபெற்றுத் திரைக்கை நீட்டி,
ஒலிக்கின்ற கடலே,யிவ் வுலகம் சூழ
கரையுமின்றி உன்னைவைத்தார் யாரே?" யென்பேன்.
"கானகத்திற் பைங்கிளிகாள்! கமல மேவும்
வரிசிறைவண் டினங்காளோ திமங்காள்! தூது
மார்க்கமன்றோ, நீங்களிது வரையி லேயும்
பெரியபரி பூரணமாம் பொருளைக் கண்டு
பேசியதுண் டோ?வொருக்கால் பேசு"மென்பேன்.

## (iii) தாயுமானவரும் சைவசமயாசிரியர்களும்

சைவசமயாசிரியர்களான அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் முதலானோரிடம் இவருக்கு அதிக பக்தியுண்டு. அவர்கள் *கவிகளின் அமிர்தத்தை புசித்து, இவர் ஆநந்தித்தவர். ஆகையால், மேற்கண்ட சமயகுரவர்களின் பாடல்களில் காணப்பட்ட வித்துக்கள், தாயுமான

* "துன்றுமனக் கவலைகெடப் புலைநா யேனைத்
தொழும்புகொளச் சீகாழி துரையே! தூது
சென்றிடவே பொருளைவைத்த நாவலோய்! நஞ்
சிவனப்பா வென்றவருட் செல்வத் தேவே,"
"தேவர்தொழும் வாதவூர்த் தேவே" யென்பேன்,
"திருமூலத் தேவே!யிச் சகததோர் முத்தி
காவலுறச் சிவவேனவாக் கீடனே வந்த
வாசே!சும் மாவிருந்துன் னருளைச் சாரப்
பூவுலகில் வளாருண கிரியே! மற்றைப்
புண்ணியர்காளோ"வென்பேன், புரையொன் றில்லா
ஓவியம்போ லசைவறவும் தானே நிற்பேன்,
ஓதரிய துயர்கெடவே யுரைக்கு முன்னே.

வர் பாடலில், மரஞ்செடிகளாய்ப் பூத்துக் காய்த்துக்கனிக்கா நின்றன. தாயுமானவர்போல், வேளாளகுலத்தில் அவதரித்தவரான அப்பர் சுவாமிகளுக்குத் திருநாவுக்கரசு என்னும் நாமம் அமைந்தகாரணம், அவர் சொற்களின் நயத்தாலும் அச்சொற்களிலமைந்த எழுத்துக்கள் கொடுக்கும் ஒலியின் இன்பத்தினாலேயுமாம். அப்பர் பாடல்களில் யாதேனும் ஒரு சொல்லை யெடுத்துவிட்டு, அதேபொருள் கொடுக்கும் மற்றொரு சொல்லை சீர்மாறுதலின்றி அமைத்தாலும், பாட்டின ஒலிநயம்* கெடும். இதற்குக் காரணம் பின்னும் ஆராய்ந்துபார்க்கின், விளங்குவதென்னவெனில், ஒரு பொருளைத்தருகின்ற பலமொழிகளில், ஒருமொழியே அப்பாடலின் மொத்தத்தோற்றத்திற்குத் தக்க வொலியைப் பெற்றிருக்கின்றது. கொடியவை, கடூரமானவை, கோபமானவை,† மற்றும் இவை போன்றன குறிக்கும் பாடலில், வல்லின எழுத்துக்களால் பெரும்பாலும் ஆக்கப்பட்ட மொழிகள் போல், மற்ற இனங்களாலான மொழிகள் ஓசை பொருந்தா. அங்ஙனமே,

---

* பன்னி லூறும் பழத்தினும் இன்சுவை
என்னி லூறி, யெனக்கே கனிதரும்.
உன்னி லுன்னுமுன் னுவிடில் விட்டிடும்,
என்னு ளீசன் இருந்த வியற்கையே."

அப்பர்-பொது-திருக்குறுந்தொகை.

† கற்றதுங்கேட் டதுந்தானே வதுக் காக?
கடபடமென் றுருட்டுதற்கோ ? கல்லா லெம்மான்,
குற்றமறக் கைகாட்டும் கருத்தைக் கண்டு,
குணங்குறியற் றின்பநிஷ்டை கூட வன்றோ?

இனிமை, *இன்பம் முதலியன கூறும் பாவில், பெரும்பா லும் மெல்லின எழுத்துக்களாலான மொழிகள் பொருந் துவ போல், மற்ற இனவெழுத்துக்கள் அந்நோக்குக்குத் தக்க ஓசை தாரா. அங்ஙனமே, பெரும்பாலும் இடை யின †வெழுத்துக்களாலாகிய மொழிகள், வேண்டுகோள், போற்றுதல், முதலிய நிதானக்காரியங்களைக் காட்டும் நடைக்குத்தக்கவாறு, ஓசை கொடுக்கும்.

திருநாவுக்கரசு நாயனார் பாடல்கள்போல் எழுத்து, சொல், இவை நயத்துடன் பொருந்திய பாடல்களையே தாயுமானவர் பெரும்பாலும் பாடியுள்ளார். அப்பரும் தாயுமானவரும் எப்பாடலும் ஓரினத்தாலேயே பாடும் படிமுயன்றதில்லை. ஏனெனில், அவ்விதக் கவி இயற்கை லட்சணமின்றி, செயற்கைலட்சணமாய் விளங்கும். உண் டியில் அறுசுவைக்கலப்பு, தின்பண்டத்திற்குத் தக்க வாறு அளவுகள் மாறுதல்போல், பாவின் விஷயத் திற்குத் தக்கவாறு, எழுத்துக்களின் இனங்களின் அளவு, ஒலிக்கும், அபிப்பிராயத்திற்கும் தக்கவாறு மாறுதலா யிற்று. ஆகையால் தாயுமானவரை, இரண்டாம் திரு நாவுக்கரசென்றும் கூறலாம்.

திருஞான சம்பந்தர், தாயுமானவர்போல் ஆரியப் பண்களை மாற்றித் தமிழில்நுழைக்கவும், நவீனப்பண்க

---

* அன்னைபோல, வருணமிகுத்து மன்னுஞான வாதனே!
என்னையே,யெனக்களித்த நின்னை,யானு நினைவனே.

† வாழ்வெனவும், தாழ்வெனவும், இரண்டாய்ப் பேசும்
வையகத்தார், கற்பனையா மயக்க மான
பாழ்வலையைக், கிழித்துதறிச் செயல்போய் வாழப்
பரமே!நின் ஆநந்தப் பார்வை எங்கே ?

ஊச் சிருஷ்டிக்கவும் வல்லவர். திருஞானசம்பந்தர் பண்களிற் சிறந்தது, திருத்தருமபுரம் ஸ்தலத்தில் பாடிய யாழ் முறிப்பண்*. இசையியல் இரண்டிலும் வல்ல திருநீலகண்டத்துயாழ்பாண நாயனாரை, இப்பண் தடுமாறச் செய்து, யாழை அவர் முறிக்கலானாராதலின், இப்பண்ணுக்கு யாழ்மூரி என்னும் பெயர் வந்தது. இத்தகைய பண், இத்தாலியர் பாண்ட் (Italian Band) இசையில் காணலாம். தாயுமானவர் பாடிய ஆநந்தக்களிப்பு என்னும் முப்பது பாடல்களும், சம்பந்தர் யாழ்மூரிப்போல் மிகவும் அற்புதமான சிருஷ்டியாம். பின்வருபவர் யாப்பிலக்கணம் தடுமாறுவண்ணம், விஷயத்திற்குப் பொருந்தும் பல்லவிபோன்ற "சங்கர சங்கர சம்பு" என்னும் சந்தக்குழிப்பால்† அதன் யாப்பிலக்கணம் சுட்டியுள்ளார். இசையின் அருமை தெரிந்த இஞ்ஞானி வடமொழிச்

---

யாழ் மூரியின் யாப்பிலக்கணம்

* முன்னது கூவிளமே;—யதன்—பின்னது காய்தனை
யடை—யது.—தனி—நிறை, நடுவினிற் பொருந்த,
அன்னவை தம்பிறகே,—யிரு—சீர்களும் கூவிளம்;
கரு—விளம்—பகுத்—திட விரண்டிரண் டெனவே
சொன்னவை நாலசையாம்,—அவை—சீருட னேவரச்
சொலும்—கடை—முடி யவை, ஒருவிளம், புளிமா
இன்னதை யாழ்முறிப்பண்—ணென—ஞானசம் பந்தன்ப
கரும்—.தனி—நடை—யுடை, கவியெனப் பகரே.

† "ஆனந்தக்களிப்பு" கூவிளச்சீர்களாலும், தேமாச்சீர்களாலும்செய்யப்பட்டது. சந்த மரபை அனுசரித்துக்கூவிளத்திற்கு தேமாங்காயும், தனிநிற்கும் தேமாவுக்கு பதிலாய் ஒரு நிரையசையும் வாரா நிற்கும்,

சொற்களைத் தமிழ்மொழி உருவம்கொடாமல் தன் சந்த விருத்தங்களில் பெரும்பாலும் உபயோகிக்கின்றார். அதனால் ஆரியத்தொடு செந்தமிழ் கலக்கும் பயன்*, இசையி †வின்ன பாடுவோர் யாவருக்கும் தெரிந்ததே. தமிழே படித்து, வேறு பாஷைகள் கல்லாதிருக்கும், கற்றறி மூடர்களான சமணர்களின் குற்றம், இந்நுட்பம் அறியாமையே. ஆகையால் தாயுமானவர்போல், இதர பாஷைகளிலுள்ள சொற்களைத் தமிழகராதியில் இன்றியமையாதனவற்றைச் சேர்ப்பிப்பதால், நமது பாஷைக்குச் சிறப்புண்டாகுமன்றி, இழிவு நேராது.

திருஞானசம்பந்தர் ஓரசைச்சீர் தனது விருத்தங்

---

* "சந்து சேனனும், இந்து சேனனும்,
தருமசேனனும், கருமைசேர்
கந்து சேனனும், கனக சேனனும்,
முதல தாகிய பெயர்கொளா,
மந்தி போற்றிரிந் தாரி யத்தொடு,
செந்தமிழ்ப் பயன் அறிகிலா
அந்த கர்கெளி யேன லேன்,திரு
ஆல வாயான் நிற்கவே."—சம்பந்தர்.

"வாயி ருந்தமி ழேபடித் தாளுற,
ஆயிரம்சம ணும்அழி வாக்கினான்,
பாயி ரும்புன லாறைவ டதளி
மேய வன்,னென வல்வினை வீடுமே."—அப்பர்

இப்பாசுரங்களை நோக்குக.

† "மாக விந்த்ராதனு", "த்ரியம்பகி!, யெழிற் புங்கவி! விளங்கு சிவசங்கரி! சஹஸ்தாதள புஷ்பமிசை வீற்றிருக்கு நாரணி!"

களில் உபயோகித்தனரேனும், சுந்தரமூர்த்தி நாயனாரைப் போல் ஓரசைச் சீர், நாலசைச்சீர் இவற்றை அதிகமாய் நாம் அவர் தேவாரத்தில் காண்கிலோம். சுந்தரமூர்த்தி நாயனாரே, ஓரசை, நாலசைச் சீர்களின் இசைப்பயனைக் * கண்டுணர்ந்து, அதிகமாய் உபயோகிக்கலானார். அவர் முதல் பாடலாகிய, "பித்தா பிறைசூடி" என்னும் பாடலில் தேமாங்கனிச்சீருக்கு, தேமாந்தண்பூ, உபயோகிப்பதைக் காண்க. ஓரசைச்சீரே, நட்டராக சந்தத்திற்குத்

---

* பண்ணி னிசைபோலப் பரமன்பா னின்றதிறம்
எண்ணி, யருளாகியிருக்குநா ளெந்நாளோ ?"

—தாயுமானவர் "நிற்குநிலை"

"ஏழிசையாய், இசைப்பயனாய், இன்னமுதாய், என்னுடைய
தோழனுமாய், யான்செய்யும் துரிசுகளுக் குடனாகி,
மாழையொண்கண் பரவையைத்தந் தாண்டானை, மதியிலா
ஏழையேன் பிரிந்திருக்கேன், என்னாரூர் இறைவனையே"

—சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்.

மற்றும் தாயுமானவர்

"திருந்துசீரடித் தாமரைக் கன்புதான் செய்யப்
பொருந்துநாள் நல்லபுண்ணியம் செய்யுநாள், பொருந்தா
திருந்தநாள், வெகுதீவினை யிழைத்தநா ளென்றால்,
அருந்தவா! உனைப்பொருந்துநா ளெந்தநா ளடிமை?"

என்பது,

சுந்தரரின்

"இட்டனும், மடியேத்துவாரிகழ்ந் திட்டநாள், மறந்திட்டநாள்;
கெட்டநாள் இவை, என்றலாற் கருதேன்"

என்பதின் எதிரொலியன்றோ ?

திலகமாய் விளங்குவதாம். ஆனந்தக்களிப் பென்னும் தாயுமானவர் "சங்கர சங்கர சம்பு" வில் தனிநிரை யசை நடுவில் வருவதின் பலனை இசையில் காண்க. 'அங்கிங்கெனாதபடி,' போன்றசந்தவிருத்தங்களில், ஒவ்வொரு அரையடியிலும் ஈற்றிலுள்ள நெடில், அதாவது ஓரசைச்சீரே, இசைக்கு சம்பூரணம்தருவது. இச்சீர்களின் உபயோக நுட்பம், சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரத்தில் கண்டே, தாயுமானவர், அவரைத் தமிழ்ச்சமர்த்தரென்றார்.*

திருவாசகத்தில், மணிவாசகப் பெருமான் எழுதியுள்ள விஷயமும், நடையும், தாயுமானவர் பாடலிலுள்ள அன்னவைக்கும் பேதம் சற்றும் கிடையாதென்னலாம். இருவரும் செய்தவை தோத்திரப்பாமாலைகளே. வெண்பா, கலித்துறைகள், கொச்சகம், அகவல், விருத்தங்கள் இவ்விருவர் நூல்களினுமுள்ளன. இவ்விருவரும் தர்க்கஞான முறையில் கடவுளைக்கண்டு களிக்கின்றனர். இருவரும் ஒரு சமயத்தினராய், உபதேசமுறையால்

---

* தாயுமானவர் பாடல்கள் சில சுந்தரமூர்த்தி நாயனார் பாக்களுக்கு எதிரொலி என்னலாம்:—

பாடு கின்ற பனுவ லோர்கள், தேடு கின்ற செல்வமே!
நாடு கின்ற ஞான மன்றில், ஆடு கின்ற அழகனே!"

—தாயுமானவர்.

" பாட்டும் பாடிப் பரவித் திரிவார்,
ஈட்டும் வினைகள் தீர்ப்பார் கோயில்
காட்டும் கலமும், திமிலும், கரைக்கே
ஓட்டும், திரைவாய் ஒற்றி யூரே "—சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்.

ஞானம் பெற்றவர்கள். இவ்விருவரின் கல்வி, குணம், உலக அநுபவம், ஒருதன்மையவாம். இவ்விருவரும் ஞானமார்க்கத்தை, அகப்பொருள், புறப்பொருள் என்னும் பொருளதிகார வழியில் திருப்பி உலகத்திற்கு காட்டியவர்கள். அஃதெவ்வாறெனின்:—

அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றும் கர்மகாண்டிகளுக்கு இருப்பதுபோல, ஞானகாண்டிகளுக்கும் அறம், பொருள், இன்பம் உண்டென்பது ஆன்றோர் துணிபு. இம்மூன்றில், முதலிரண்டும் புறப்பொருளாயும், மற்றது அகப்பொருளாயும் நிற்கும். ஒரு அரசன், துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனம் செய்யவேண்டுமென்பது பொருந்த, துஷ்டரான பகைவர்களுடன் போர்புரிந்து, சிஷ்டர்களான தன்னவர்களுக்குப்பலவகைச் செல்வம் தருகின்றனன். இனைய புறத்தொழில் புரியானேல், அகத்தின்கண் இன்பம் நிலைக்காது. இன்பம், ஞானி பெறுவது "தெவிட்டாத ஆநந்தம்". அது நிலைக்கப் புறத்தொழிலாகும் அறம்காட்டும் புறப்பொருளாவது, அடியில் விவரித்த பாசுர தாத்பரியமே:—

"இன்றெனக் கருளி, இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை, நினைப்பற நினைந்தேன்,
நீயலாற் பிறிது மற்றின்மை ;
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றும்
திருப்பெருந் துறையுறை சிவனே !
ஒன்றுநீ யல்லை, யன்றியொன் றில்லை
உன்னையார் அறியகிற் பாரே?"

பகையாகிய அஞ்ஞான இருளைக்கொன்று, மெய்ஞ்ஞான ஒளியைநிலைநிறுத்தி வைப்பதாகிய புறத்தினுள்ள ஞானியின் கடமையும், அறிவுமே, அகத்திலே இன்பம் பயக்கும்; சமாதிக்கு மிடங்கொடுக்கு மென்பர். மனோவாக்குக் கெட்டாத பேரின்பத்தை, சிற்றின்ப *ரூபமாய்க் காட்டும் திருச்சிற்றம்பலக்கோவையில், உள்ள உருவகம் சிறுவர்மனதுக்கேறுமெதன வெண்ணி, மிகவும் சுலபமாய்ச் சாதானஞ் செய்யும் வழிகளைத் தாயுமானவர் உணர்த்துகின்றனர்.† சைவசமய குரவர்கள் நால்வர் பாடல்களான

---

* " காதன்மிகு மணியிழையா ரெனவா டுற்றேன்,
கருத்தறிந்து, புரப்பதுன்மேல் கடன் முக் காலும் "

" அரும்போ,நன் மணங்காட்டும்? காமரசம் கன்னி
யறிவாளோ?
அபக்குவாக்கோ, அந்நலம்தான் விளங்கும்?"

† தாயுமானவர் அகப்பொருள் :—

" நினைவொன்று நினையாமல் நிற்கினக மென்பார்,
நிற்குமிட மேயருளாம், நிஷ்டையருள் ஒட்டும்.
தனையென்று மறந்திருப்ப, அருள்வடிவா னதுமேல்
தட்டியெழுந் திருக்குமின்பத் தன்மையமாய் அதுவாம்,
பினையொன்று மிலையந்த இன்பமெனும் நிலையம்;
பெற்றாரோ, பிறவாமை பெற்றார்..........."

தாயுமானவர் புறப்பொருள் :—

" இடம்பொருளே வலைக்குறித்து, மடம்புகுநா யெனவே
எங்கேநீ புறப்பட்டா? யிங்கே, நீவாடா;
மடம்பெறுபாழ் நெஞ்சாலே, அஞ்சாதே ; நிராசை
மன்னிடமே யிட,மந்த மாநிலத்தித போநளும்,
திடம்பெறவே நிற்கினெல்லா வுலகமும்வந் தேவல்
செய்,மிந்த நிலைநின்றார் சனகன்முதல் முனிவர்;
கடம்பெறுமா மதயானை யென்னவு,நீ, பாசக்
கட்டான நிகளபந்தக் கட்டவிழப்பாரே.

தேவாரதிருவாசக நூல்களின் சாரங்கள், தாயுமானவர் பாடல்கள் அமையப் பெற்றிருப்பதுடன் அருணகிரி நாதர், சைவசமயசந்தானகுரவர் நூல்களும், தாயுமானவர் தத்துவத்திற்கு ஒத்தன வாயிருந்தன.

தனது ஆசிரியர் திருமூலர் மரபில் வந்த மௌன குருவாதலால், தாயுமானவர் திருமந்திரத்தை அதிக விநயத்துடன் பாராயணம் செய்தார்:—

“மரத்தை மறைத்தது, மாமத யானை.
மரத்தில் மறைந்தது, மாமத யானை.
பரத்தை மறைத்தது, பார்முதல் பூதம்.
பரத்தில் மறைந்தது,பார்முதல் பூதம்” என்பதே

“யானெனல் காணேன், பூரண நிறைவில்;
யாதிலு மிருந்தபே ரொளிநீ.
தானென நிற்கும் சமத்துற வென்னைத்
தன்னவ னுக்கவும் தகும்காண்;
வானென வயங்கி, யொன்றிரண் டென்னு
மார்க்கமா நெறிதந்து மாறுத்
தேனென ருசித்து, அன்பரைக் கலந்த
செல்வமே! சிற்பர சிவமே!”—தாயுமானவர்.

இவ்வாறே சிவவாக்கியரும், தாயுமானவர் மனதிலில் லாமலில்லை.

“அகரகா ரணத்துளே, அநேகனேக ரூபமாய்,
உகரகா ரணத்துளே, உருத்தரித்து நின்றவன்;
மகரகா ரணத்துளே, மயங்கிநின்ற வையகம்,
சிகரகா ரணத்துளே, தெளிந்ததே சிவாயமே”

—சிவவாக்கியார்

பாடலுடன் அடியிற் தாயுமானவர் பாடலையும் உற்று நோக்குக.

“அகரவுயி ரெழுத்தனைத்து மாகி, வேறு
யமர்ந்ததென, வகிலாண்ட மனைத்து மாகிப்
பகர்வனவெல் லாமாகி, யல்ல தாகிப்
பரமாகி, சொல்லரிய பான்மை யாகி,
துகளறுசங் கற்பவிகற் பங்க ளெல்லாம்
தோயாத அறிவாகிச் சுத்த மாகி,
நிகரில்பசு பதியான பொருளை, நாடி,
நெட்டுயிர்த்துப்பேரன்பால் நினைதல் செய்வாம்.”

சைவஞானிகளான பட்டினத்தடிகள், அருணகிரிநாதர், பாடல்களின் எதிரொலி, தாயுமானவர் பாடல்களில் சிற் சில இடங்களில் கேட்கின்றோம். பட்டினத்தார் கட்டளைக் கலித்துறைபோலவே, நடையும், விஷயமும், தாயுமான வர் “பாயப்புலி” யென்னும், 59 கட்டளைக்கலித்துறைக ளிருக்கின்றன. தாயுமானவர், “அருவென்பனவு மின்றி” என்று ஆரம்பிக்கும் வண்ணம், பட்டினத்தடிகள் உடற் கூற்றுவண்ணத்திற்கு ஒக்கும் ஆயினும், தாயுமானவர் வண்ணம், சந்தம் வேறாய் அறுபத்தினான்கு சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தமாயிருக்கின்றது. அவ்வகைப் பெருத்த சீர்களின் எண்களையுடைய கழிநெடிலாசிரியங் கள் எழுத வழிகாட்டியவர், தமிழில் அருணகிரிநாதராம்.

ஆதலால் நாம் தாயுமானவரைப் படிக்கும்போது, நமது மனதுக்குமுன், தமிழிலக்கியக்காரர்கள் யாவரும் வந்துவந்து மறைகின்றனர்.

# ஆறும் அத்தியாயம்

## தாயுமானவரும் தத்துவ ஆராய்ச்சியும்:—

### (i) தாயுமானவருக்கு முற்பட்ட தத்துவ ஆராய்ச்சி.

ஐரோப்பிய கண்டத்திலும், பரதகண்டத்திலும் சுமார் 2500-வருஷங்களுக்கு முற்பட்டு, நாளது வரையில் தத்துவ ஆராய்ச்சிக்குறைவில்லை. அடுக்கடுக்காயுள்ள இவ் வண்டசராசரங்களின் உற்பத்தி யெவ்வாறு, முடிவு எவ் வாறு, நாம் வருவதும் போவதும் எதனால் என்பனவே முக்கிய விஷயங்களாயிருக்கின்றன. ஆஸ்திகரும், நாஸ்தி கரும் மனம்போன போக்காய் ஒவ்வொருவரும், ஒவ் வொரு விதமான சித்தாந்தங்கள் ஏற்படுத்தியிருக்கிறார் கள். நமது நாட்டிலுள்ள துவிதம், அத்துவிதங்கள் போல், மேல்நாட்டிலும், மேற்கண்டத்திலும், எண்ணற்ற* சித்தாந்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன. பரதகண்டத்தி லுள்ள தத்துவ ஆராய்ச்சிகளில், தற்காலத்திலும், தாயு மானவர்காலத்திலும், யாவும், இருவகுப்பிலடக்கலாம். விசிட்டாத்துவைதமும், துவைதமும் துவிததத்துவ வகுப்பிற்பட்டன. அவை, ஈசனும், ஜீவர்களும் எக்காலத் திலும் ஒருபொருளாகாவென்றும், மாயைவிட்டு நீங்க, ஜீவன் சாரூபம் அடைவது மோட்சமென்ப. அத்துவைதி கள், எதிர்காலத்தில் மாத்திரம், மாயை நீங்கிய ஜீவன் கடவுளுக்கு வேறன்றென்பர். இவ்வத்துவைதிகளில், சிவாத்துவைதிகளென்றும் கேவலாத்வைதிகளென்றும், இரண்டு உட்பிரிவு உண்டு. அவற்றுள் சிவாத்துவைதிகள்,

* "பேதித்த சமயமோ, ஒன்றுசொன்ன படியொன்று பேசாது"

ஜகஜீவபரம் என்னும் பாசம், பசு, பதி என்னும் மூன்று பொருள்களும், இறந்தகால நிகழ்காலங்களில் வேறாயி னும், பாசம் நீங்கிய பசு, எதிர்காலத்தில் பரத்துடன் இரண்டறக்கலக்கு மென்பதும், அச்சாயுச்சியபதவியே மோட்ச மென்பதும் புகல்வார்*. சங்கராசாரியார் கொள் கைகளை ஆமோதிக்கும் கேவலாத்வைதிகள், ஜகஜீவபரம் மூன்றாய்க் காணப்படினும் ஒன்றேயென்றும், அங்ஙனம் தோற்றுவிப்பது அஞ்ஞான மெனவும், மெய்ஞ்ஞானக் கண்ணால் அபேதம் ஏற்படுமென்பதும், கூறுவர்†. உலக வழக்கில், சிவாத்துவிதத்தை சித்தாந்த மென்றும், கேவ லம், அல்லது கைவல்யாத்துவிதத்தை, ‡ வேதாந்தமென் றும் சொல்வதுண்டு.

இவ்விருவகைக் கொள்கையரான சித்தாந்திகள், வேதாந்திகள், போராட்டங்களை எழுதப்புகின், ஆயிரக் கணக்கான பக்கங்களாம். "கடபட மென்னும்" ஆரிய தர்க்க வாய்பாடுகளுடன், "மாறுபடுதர்க்கம் தொடுக்க அறிவார்" என்று பலவாறு தாயுமானவர் இழித்திழித்துக்கூறியுள்

---

* நீலகண்ட சிவாசாரியார் முதலியோர் சைவ பாஷியங் களையும், சிவஞான போதம், சிவஞான சித்தியார், முதலியநூல் களையும் நோக்குக.

† தன்னால் விளையும் ஜகஜீவ பரம், தன்னாலழியும் தன தாம் விழியால், என்னால் எனையெண்ணி லெனக்கருளும், மன் னே! யடியே னபயம்! அபயம்!—தத்துவராயர் பாடுதுறை.

‡ வேதாந்த நூல்கள் தமிழில் எளிதில் கற்கக் கூடியன கைவல்ய நவநீதம், ஞானவர் சிஷ்டம், ஹிந்தியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்ட விசாரசாகாரம், விருத்திப் பிரபா காம் என்னும் நூல்கள் உள.

ளார். வேதாந்தமென்னும் சங்கராத்துவைதம், நாஸ்திகர்களுக்கும், ஆஸ்திகர்களுக்கும், சம்மத முண்டாக்குமாறு, உலகின் உண்மையைப் புறநோக்கால் காணுமல், அகநோக்கில், நான்* என்னும் பொருள் எது? என்று கண்டறிவதே முத்திபூமியாமெனக் கூறியதெனினும், கன்மகாண்டிகளில் இழிஞர்கைப்பட்டு, யாங்களே கடவுளென்னும் அல்வழிக்கு விட்டது, தாயுமானவர் மனம் பொறுக்கவில்லை. இவ்வபாயம் நேரும் என்பதும், வேதாந்த நூல்கள்† கண்டுள்ளன. இத்தகைய தத்துவ ஆராய்ச்சிகளை, பக்ஷபாதமின்றி ஆராய்ந்த தாயுமானவர், தர்க்கத்தால் உடைக்கக்கூடிய சிவாத்துவைதத்தையும், பூரணமாய் ஆமோதிக்காமல், கன்மபிரஷ்டராக்கும் வேதாந்தத்தையும், ஒருவாறு வழிப்படுத்தி, இவ்விரண்டு கொள்கைகளையும் தழுவி தர்க்கமான ஞானங்காட்டும் சமரசஞான வழியை ஏற்படுத்தினர்.

## (ii) தாயுமானவர் சமரசத்தின் சிறப்பு

பேரின்பவீட்டையடைய வேண்டுவோன், தன்னுயிர்போல், உலகிலுள்ள உயிர்திரள்கள் என, கருணை

---

* "தன்னையும், தனக்காதாரத் தலைவனையும், கண்டானேற்
பின்னையத் தலைவன தானுய்ப் பிரமமாய்ப் பிறப்பு தீர்வன்
உன்னை நீ யறிவாயாகில், உனக்கோரு கேடுமில்லை,
என்னை நீ கேட்கையாலே ஈதுப தேசித்தேனே"
—கைவல்ய நவநீதம்

† "இயற்கை குணம் சோதித்து, முன்னேபின்னே
யாவையுமாம் பிரமம்நீ, யென்னல் வேண்டும்.
தியக்குற,வா சையிலுழல்வாற் கிவ்வாறோதின்,
மீளாத நிரகில் வீழ்த்ததாகும்."—ஞானவாசிஷ்டம்.

வாய்த்த மனத்தனாய் * நன்மையாய் இதமுரைப்பதுடன், எனதென்னும் பற்றை வேரறகளையவேண்டும். "வாராயோ என்பிராண நாதா" எனக் கற்புறு சிந்தைமாது மனமுருகுதல்போல், சர்வேஸ்வரனிடத்தில் மிக்க பக்தி பூணவேண்டும். இவ்விரண்டும், ஞானத்திற்கும், முத்திக்கும், இன்றியமையாதன வென்பது, தாயுமானவா சமரசகட்டட அஸ்திவாரமாகும்.

"பக்தி" என்று மேல் குறித்தது, கடல், நதி முழுகுதல், பட்டினி, அக்னி யோத்திரம் முதலிய மூடபக்தியன்று† ஒரு உருவம் அமைத்து, கையொன்றுசெய்ய மன

---

* (1) அழுக்காற்றால், நெஞ்சம் அழுங்கியபுன் மாக்கள்,
இழுக்காற்றால், இன்பநலம் எய்தார் பராபரமே!

(2) கொலை, களவு, கட்காமம், கோபம், விட்டா லன்றோ
மலையிலக்காய் நின்னருள்தான் வாய்க்கும் பராபரமே!

(3) கெட்டவழி ஆணவப்பேய் கீழாக, மேலான
சிட்டருளைப் பூசை செய்வார் பராபரமே!

† "துள்ளுமறி யாமனது பலிகொடுத் தேன், கர்ம
தஷ்டதே வதைகளில் லை,
துரியநிறை சாந்ததே வதையாமு னக்கே,
தொழும்பனன் பபிஷேக நீர்
உள்ளுறையி லென்னாவி, நைவேத்தி யம்ப்ராணன்,
ஓங்குமதி தூபதீ பம்,
ஒருகால மன்றிது சதாகால பூசையா
யொப்புவித் தேன்; கருணை கூர்
தெள்ளிமறை வடியிட்ட அமுதப்பி ழம்பே!
தெளிந்ததே னேசீனி யே!
திவ்யரசம் யாவையும் திரண்டொழுகு பாகே!
தெவிட்டாத வானந்த மே
கள்ளனறி வூடுமே, மெள்ளமெள வெளியாய்க்
கலக்கவரு நல்லவுற வே!
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணாக ரக்கடவு ளே."

மொன்றெண்ண, பூசையில் இருப்பதுபோல், குப்பத்தி லிருக்கும் சிவபூசையன்று, இவர் செய்த பூசை. உடல் பொருள் ஆவி மூன்றும்* இறைவனுக்கு சமர்ப்பித்த பூசையாம்* இப் பூசையே, இயமம், நியமம்† என்னும் எட்டு அங்கங்களைப் பெற்ற ராஜயோகப் பயிர்ச்சியாய் தாயுமானவர் தியானம் செய்யலானார்‡ இவர் சரியை, கிரியை, யோகம் ஞானம் முறையே வாய்ந்தவர். இத்தகைய பக்தி பழுத்த ராஜயோகியாகிய தாயுமானவர், யாதொரு மதக்கொள்கையிலும் அபிமானம், பட்சபாதம், பிடிவாதமின்றி§ உலக உற்பத்தி விநாசங்களை எவ்விதம் காட்டுகிறார் என்பதை ஆராய்வோமாக. உலகம் எங்ஙனம் உற்பத்தியாயிற்று, மீண்டும் அழிவதெப்படி, என்பதற்கு இரண்டுவிதமான விடைகள் தாயுமானவர் பாடல்களாற்

---

*...வைத்தபொரு ளுடலாவி மூன்று நின்கை
வசமெனவே யான்கொடுக்க, வாங்கிக் கொண்டு
சித்தமிசை புகுந்ததுதான் மெய்யோ ? பொய்யோ ?
சிறியேற்கிங் குளவுரையாய், திகையா வண்ணம்.

† நோயும், வெங்கலிப் பேயும் தொடா,நின்
னூலின் சொன்ன முறையிய மாதிநான்
தோயும் வண்ணம், எனைக்காக்கும் காவலும,
தொழும்பு கொள்ளும் சுவாமியு நீகண்டாய்!
ஓயும் சன்மம், இனியஞ்சல், அஞ்சலென்
றுலகம் கண்டு தொழ,வோ ருருவிலே,
தாயும் தந்தையு மானோய், சிரகிரித்
தாயுமான தயாபர மூர்த்தியே!

‡ விரும்பும் சரியைமுதல், மெய்ஞ்ஞான நான்கும்
அரும்பு, மலர், காய்,கனிபோ லன்றோ, பராபரமே ?

§ வேறுபடும் சமயமெல்லாம் புகுந்து பார்க்கின்,
விளங்குபரம் பொருளே! நின் விளையாட் டல்லால்,
மாறுபடும் கருத்தில்லை, முடிவில் மோன
வாரிதியில், நதித்திரள்போல் வயங்கிற் றம்மா.

கொடுக்கமுடியும். "உலகம்" ஜீவசிருஷ்டியா, அல்லது ஈஸ்வரசிருஷ்டியா, எனநோக்குவோம். ஒவ்வொரு ஜீவனும் காணும் உலகம், அதன் இந்திரியங்கள் அநுபவத்தால் சிருஷ்டிக்கப்பட்ட உலகமன்றி, வேறில்லை. ஒருயிர் பிராணியின் உலகம், ஈருயிர் ஜீவனதல்ல. அதுபோல 3,4,5,6 அறிவுகளுடைய ஜீவர்கள் உலகம், அறிவுக்குத் தக்கவாறு பேதப்படும். மனிதர்களினும் அறிவு அதிகரித்த தேவர்களுக்கு, இவ்வுலகம் எவ்வாறிருக்குமோ, நாம் அறியோம். ஆயினும் அவர்களுக்கு புலப்படுவது நமது காட்சியன்றெனத் துணிவாய்க்கூறலாம். இத்தகைய ஜீவசிருஷ்டியாகிய உலகையே, ஈஸ்வர சிருஷ்டி என்பது, மதங்களின் மரபு. ஜீவசிருஷ்டிக்கு அதீதமாய், அதாவது ஜீவர்கள் அநுபவம் நீங்கலாக நிற்கும் ஈஸ்வரசிருஷ்டி, யாரும் கண்டவருமில்லை; காணக்கூடியதுமல்ல. இன்பதுன்பங்களுக்கும், சாதல் பிறத்தலுக்கும், காரணமாய் வயங்குவது, அவித்தையில் கட்டுப்பட்ட அவ்வச்சீவர்களின் சிருஷ்டியான உலகமே. தற்சிருஷ்டியின் கொடுமைநீக்கவே, வேதாந்தம் முதலான தத்துவ ஆராய்ச்சிகள் உண்டாயின. இச்சிருஷ்டி நீங்கலாயுள்ள, ஈஸ்வரசிருஷ்டி என்னும் பொருள் உளதேல்,* அதற்கும்,

---

* அண்டமுமாய்ப், பிண்டமுமா, யளவிலாத
ஆருயிருக் கோருயிராய், அமர்ந்தா யானல்,
கண்டவரார்? கேட்டவரார்? உன்னை லுன்னைக்
காண்பதல்லால், என்னறிவால் காணப் போமோ?
வண்டுளப மணிமார்பன், புதல்வ னோடும்,
மனைவியொடும், குடியிருந்து வணங்கிப் போற்றும்
புண்டரிக புரத்தினிலா னந்த மௌன
போதாந்த நடம்புரியும் புனித வாழ்வே!

ஜீவர்கள் சுகதுக்கத்திற்கும் சம்பந்தம் காட்டமுடியாது. அவ்வீஸ்வர சிருஷ்டியை ஈஸ்வரனெனினும் ஒன்றே. ஏனெனின், அவ்விரண்டும் மனவாக்குக் கெட்டாதவை.

மாயாரூபமான இவ்வுலகம், எப்படி உண்டாகிற்று, எப்படி அழியும், என்பதற்கு உலகத்தை ஈஸ்வரசிருஷ்டியாய் பாவித்திருப்பின், விடை யிதற்கு சுருதிகள் கூறியவாறு, தாயுமானவரும்

இடமொரு மடவாள் உலகனைத் தீந்திட்
டெவ்வுல கனைத்தையும் ஈன்றும், (என உற்பத்தியும்)
தடமுறு மகிலம் அடங்கு*நாளம்மை
தன்னையு மொழித்து,விண் ணெனவே
(என விநாசத்தையும்)

---

*தெரிவாக வூர்வன நடப்பன,பறப்பன,
செயற்கொண் டிருப்பன,முதல்
தேகங்க ளத்தனையு மோகங்கொள் பௌதிகம்;
சென்மித்த வாங்கிறக் கும்.
விரிவாய பூதங்க ளொன்றோடொன் றாயழியு,
மேற்கொண்ட சேடமது வே,
வெறுவெளிநி ராலம்ப நிறைசூன்ய முபசாந்த
வேதவே தாந்தஞா னம்.
பிரியாத பேரொளி,பி றக்கின்ற வருளருட்
பெற்றோர்கள் பெற்றபெரு மை
பிறவாமை,யென்றைக்கு மிறவாமை யாய்வந்து,
பேசாமை யாகுமென வே,
பரிவாயெ னக்கு,நீ அறிவிக்க வந்ததே
பரிபாக காலமல வோ?
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்த மே!

படருறு சோதி கருணையங் கடலே!
  பாயிருட் படுகரிற் கிடக்கக்
கடனதோ?* நினைப்பு, மறப்பெனும், திரையை
  கவர்ந்தெனை வளர்ப்பதுன் கடனே—என்றார்.

ஜீவசிருஷ்டியாகி உலகம் வந்தவாறும் போமாறும் தாயுமானவர் அநுபவத்திற்கும்† தர்க்கத்திற்கும் ‡ஒக்க அடியின் வருமாறு கூறுகின்றார் :—

---

* இறப்பும்பி றப்பும் பொருந்த—எனக்
    கெவ்வணம் வந்ததென் றெண்ணியான் பார்க்கில்,
மறப்புநி னைப்புமாய் நின்ற—வஞ்ச
    மாயம னத்தால்வ ளர்ந்தது, தோழி!
சங்கர சங்கர சம்பு

† பூதலய மாகின்ற மாயைமுத லென்பர்சிலர்,
    பொறிபுல னடங்குமிட மே
  பொருளென்பர் சிலர்,கரண முடிவென்பர் சிலர்,குணம்
    போனவிட மென்பர்சில பேர்,
நாதவடி வென்பர்சிலர், விந்துமய மென்பர்சிலர்,
    நட்டநடு வேயிருந் த
  நாமென்பர் சிலருருவ மாமென்பர் சிலர்,கருதி
    நாடிலரு வென்பர்சில பேர்,
பேதமற வுயிர்கெட்ட நிலயமென் றிடுவர்சிலர்,
    பேசினரு ளென்பர்சில பேர்,
  பின்னுமுன் னுங்கெட்ட சூனியம தென்பர் சிலர்,
    பிறவுமே மொழிவரிவை யாற்
பாதரச மாய்மனது சஞ்சலப் படுமலாற்
    பரமசுக நிஷ்டைபெறு மோ?
  பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
    பரிபூர ணானந்த மே!

  நெறிபார்க்கில், நின்னையன்றி அகிலம் வேறோ?
    நிலநீர்தீக் கால்வானு நீயலாத
  குறியாது மில்லையென்றால், யாங்கள் வேறோ?
    கோதையொரு கூறுடையாய்! கூறாய், கூறாய்.

‡ நெறிக ளாம்பல, பலவுமா யந்தந்த நெறிக்காம்
  செறியும் தெய்வமும், பலபல வாகவும் செறிந்தால்,
  அறியும் தன்மையிங் காருனை யறிவினு லறிந்தோர்?
  பிறியும் தன்மையில் லாவகை கலக்கின்ற பெரியோய்!

## உலகம் எவ்வாறு வந்ததென்பது*

நானென்னு மோரகந்தை யெவர்க்கும் வந்து
நலிந்தவுடன், சகமாயை நாணு வாகித்
தான்வந்து தொடருமித்தால் வளரும் துன்பச்
சாகரத்தின் பெருமை, யெவர் சாற்ற வல்லார்?
ஊனென்றும், உடலென்றும், கரணமென்றும்,
உள்ளென்றும், புறமென்று, மொழியா நின்ற
வானென்றும், காலென்றும், தீ,நீ ரென்றும்,
மண்ணென்றும், மலையென்றும், வனம தென்றும்,

மலைமலையாம் காட்சிகண்கா ணுமை யாதி
மறப்பென்றும், நினைப்பென்றும், மாயா வாரி
அலையலையாய் அடிக்குமின்ப துன்பம் என்றும்,
அதைவிளைக்கும் வினைகளென்றும், அதனைத் தீர்க்கத்
தலைபலவாம் சமயமென்றும், தெய்வ மென்றும்,
சாதகரென் றும்,மதற்குச் சாக்ஷியாக
கலைபலவாம் நெறியென்றும், தர்க்க மென்றுங்
கடலுறுநுண் மணலெண்ணிக் காணும்........."

"கூறும் வைம்பூதச் சுமையைத் தாங்கி
குணமிலா மனமெனும்பேய்க் குரங்கின் பின்னே,
மாறாத கவலையுடன் சுழல"

இச் ஜீவசிருஷ்டி யுண்டாயிற்று. அது தன்னிடத்து

---

* பெரிய அண்டங்க ளெத்தனை? அமைத்து அவில் பிறங்கும்
உரிய பல்லுயி ரெத்தனை? அமைத்தவைக் குறுதி
வருவ தெத்தனை, அமைத்தனை? அமைத்தருள் வளர்க்கும்
அரியதத்துவ! எனக்கிந்த வண்ணமேன் அமைத்தாய்?

எவ்வாறழிந்த தென்பது பற்பலவிடத்தில் பற்பல விதங்களால் * ஒரு விஷயமே கூறுகின்றார். அதனை அடியில் வரும் பாக்களால் உணர்க :—

(1) " நானெனவு, நீயெனவு, மிருதன்மை நாடாமல்,
நடுவே, சும்மா
தானமரு நிலையெனவே, சத்தியம், சத்தியமென நீ
தமிய னேற்கு
மோனகுரு வாகியும்கை காட்டினையே,
திரும்பவும்நான் முளைத்துத் தோன்றி,
மானதமார்க் கம்புரிந்திங் கலைந்தேனே, பரந்தேனே
வஞ்ச னேனே.

(2) " அன்பருக் கன்பான மெய்யன்,—ஐயன்—ஆனந்த மோனன் அருட்குருநாதன்" செய்த தென்னவெனில்:—

" பாராதி பூதநீ யல்லை—உன்னிப்
பாரிந்தி ரியம்க ரணநீ யல்லை—
ஆரா யுணர்வுநீ யென்றான்—ஐயன்
அன்பா யுரைத்தசொல் ஆநந்தம் தோழி!
சங்கர சங்கர சம்பு

* * * *

" அருளா லெவையும்பா ரென்றான்—அத்தை,
அறியாதே சுட்டி,யென் னறிவாலே பார்த்தேன்
இருளான பொருள்கண்ட தல்லால்—கண்ட
என்னையுங் கண்டில னென்னடி தோழி?
சங்கர சங்கர சம்பு.

---

* கந்துல்பக லற்றதிருக் காட்சியர்கள் கண்டவழி
எங்கும் ஒருவழியே, எந்தாய் பராபரமே.

என்னையுந், தன்னையும், வேறா—உள்ளத்
தெண்ணாத வண்ணமி ரண்டற நிற்கச்
சொன்னது மோ,வொரு சொல்லே,—அந்தச்
சொல்லால் விளைந்த சுகத்தையென் சொல்வேன்?
சங்கர சங்கர சம்பு.

சிந்தை பிறந்தது மாங்கே,—அந்தச்
சிந்தையி றந்துதெ ளிந்தது மாங்கே,
எந்தநி லைகளு மாங்கே,—கண்ட
யானுநி ரண்டற் றிருந்த துமாங்கே,
" சங்கர சங்கர சம்பு.

ஆங்கொன்று, மீங்கொன்று முண்டோ?—சச்சி
தானந்த சோதிய கண்ட வடிவாய்,
ஓங்கிநி றைந்தது கண்டாற்—பின்னர்,
ஒன்றென் றிரண்டென் றுரைத்திடலாமோ?
சங்கர சங்கர சம்பு!

எனத்தன் சுவாநுபவத்தை வெளியிட்டிருக்கின்றனர் ஆயினும், புலன்களை வென்று வேரறக்களைந்து உள் நோக்கால் சித்தத்தில் ஊடுருவுமார்க்கம், காமம, பக்தி பழுதற்றவருக்கே வாய்ப்பது மன்றி, அம்மார்க்கம் நெருப்பாற்றை * மயிர்ப்பாலத்தால் கடக்கிற தொக்கும். எனினும், இது தவிற முத்திக்கு வேறு வழியு †மில்லை. ஆத

---

* எறுமயிர்ப் பாலமுணர் விந்தவிட யங்கணெருப்
பாறெனவு நன்று வறிந்தேன், பராபரமே.

† "உலகெது, நானுரென்ன உற்றுணர்ந் தறியுமட்டும்,
கலகமார் பிறவிமோகம் கங்குல்போல் மூடிநிற்கும்
—ஞானவாசிஷ்டம்.

லால், தேகதத்துவங்களை ஆராய்வது இன்றியமையாத தென, ஐரோப்பா கண்டத்திலுள்ள தத்துவசாஸ்திரிகள் தர்க்கம், மனோசாஸ்திரம் ஏற்படுத்தியவாறு, நமது நாட்டிலும் வேதாந்த முடிவை ஆராய்ந்தறிய தர்க்கம் முதலியன ஏற்பட்டன. ஆங்கிலேயத்தில், ஸைகாலஜி (Psychology) என்னும் மனோசாஸ்திரம் பிரத்தியேக நூலாய் வெளிவந்திருக்கின்றது. ஆனால், நமது நாட்டில் தாயுமானவருக்குமுன் அச்சாத்திரம் சங்கிரகமாகக்கூடச் சொன்னவர்கள் ஒருவருமில்லை. தொண்ணூற்றாறு * தத்துவங்க ளென்று சைவசித்தாந்திகள் கூறுவார். ஆயினும் அவற்றின் தொகை, பிரிவுகள், பிரிவுகளின் காரணங்கள் இவை சிவாகமங்களிலும், சைவ பாஷ்யங்களிலும் தெளிவாய் எடுத்துக் காட்டப்படவில்லை.

---

* மண்ணாதி யைந்தொடு, புறத்திலுள கருவியும்,
  வாக்காதி சுரோத்ராதி யும்,
வளர்கின்ற சப்தாதி, மனமாதி, கலையாதி
  மன்னுசுத் தாதியுட னே,
தொண்ணூற்றொ டாறுமற் றுள்ளளவு மௌனியாய்ச்
  சொன்னவொரு சொற்கொண்ட தே,
தூவெளிய தாயகண் டானந்த சுகவாரி
  தோற்றுமதை யென்சொல்லு வேன்?
பண்ணாரு மிசையினொடு, பாடிப்ப டித்தருட்
  பான்மைநெறி நின்று,தவ ரூப
பக்குவ விசேஷராய், நெக்குநெக் குருகிப்
  பணிந்தெழுந் திருகைகூப் பிக்,
கண்ணாறு கரைபுரள நின்றவர் பவமெலாங்
  கைவிடாக் காட்சியுற வே!
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
  கருணா கரக்கடவு ளே!

### (iii) தாயுமானவரும் மனோசாஸ்திரமும்:—

ஆங்கிலேயத்திலுள்ள மனோசாஸ்திரத்திற்கும், நமது மனோசாஸ்திரத்திற்கும், கொஞ்சம் பேதமுண்டு. மனமென்பது என்ன ? உடலிலிருப்பதா?, என்னும் இரு வினாக்களுக்கு ஆங்கிலேய மனோசாஸ்திரி சரியான விடை பகரவில்லை. "மனம்"என்பது, உடலல்ல. உடற்குள்ளிருப்பதாய் நாம் எண்ணுவதும்சரியல்ல. உடல், ஸ்தூலவஸ்துவானதால் ஸ்தூலத்திற்* குள்ளிருப்பது ஸ்தூலமாகும். மனம் ஸ்தூலவஸ்துவல்ல. ஆகையால், தேகத்திற்குள் மனமிருப்பதல்ல. மனம், தேகத்திற்கு அதீதமானது என்பார். ஆயினும், மனதிற்கும் தேகத்திற்கும் சம்பந்தமிருப்பதால், மனம், தேகத்திலிருப்பதென்பதை ஆமோதிக்காமல், தேகமும், தேகத்தால் கண்ட காட்சிகள் யாவும், மனத்து அகத்திலிருப்பதென்பதும், மனம் நீங்க, தேகம் அல்லது இயற்கைப் பொருள் எதுவும் உண்டென்பதற்கும் கூடாதென்பதும், ஆங்கிலேய மனோ சாஸ்திரிகள் கூறுவார்.

மேல்நாட்டு மனோசாஸ்திரப் பிரகாரம், மனம் என்பது, புத்தி (Intellect), சித்தம் (Feeling), செய்கையெழுவாய் (Conation), என்னும் மூன்று அங்கத்தின

---

* தானேயு மிவ்வுலகம் ஒருமுதலு மாகத்
தன்மையினுற் படைத்தளிக்கும் தலைமையது வான
கோனாக, ஒருமுதலின் குண்டெனவும், யூகம்
கூட்டியதும், சகமுடிவில் குலவுறுமெய்ஞ் ஞான.
வானாக, அம்முதலே நிற்குநிலை நம்மால்
மதிப்பரிதா மெனமோனம் வைத்ததுமுன் மனமே;
ஆனாலு மனஞ்சடமென் றழுங்காதே, யுண்மை
அறிவித்த இடங்குருவாம், அருளில தொன்றிலையே.

தென்பர். மனம் என்பது, முக்காலிபோல், இம் மூன்று கால்களாலும் இயங்கும் என்பார். முதலதின் பாகமே, நினைப்புமறைப்பாகும். நம்மவர் மனோசாஸ்திர மனதின் பாகம், நினைப்பு மறப்பும் புறத்தொழில்களுக்கு* முதலுமாம். புத்தி என்பது மனதின் கல்விக்கு வித்து. இதில் நினைப்பு மறப்பில்லை. சித்தம் என்பது மனது, புத்தி, ஒடுங்கும் காலத்திலும் உளதாய், சூன்ய நித்திரையிலும், அறிவின்றி சுகதுக்கம் அநுபவிப்பது. இவையே ஆங்கிலேய மனோசாஸ்திரத்திற்கும், நம்மவர் மனோசாஸ்திரத்திற்கும், உள்ள பேதங்களாகும். ஆங்கிலத்தில் மனதுடன், ஈகோ (Ego) என்பது, "நான்" என்னும் அகந்தை, அல்லது அகங்காரம், உளதென்பார். ஆயினும், அதற்கும் மனதிற்கும் சம்பந்தம், யாரும் விளக்கினரில்லை. இன்னும் அச்சாஸ்திரம் மேற்கண்டங்களில் ஆராய்ச்சியிலேயே இருக்கின்றதன்றி, முடிவான சித்

---

* (1) "வட்ட மிட்டொளிர்பி ராண வாயுவெனு
நிகள மோடுகம னஞ்செயா
மனமெ னும்பெரிய மத்த யானையென்
வசம டக்கிடின்மு மண்டலத்,
திட்ட முற்றவள ராஜ யோகம்"

(2) காடும் கரையும் மனக்குரங்கு கால்விட்டோட, வதன் பிறகே
ஓடும் தொழிலாற் பயனுளதோ? ஒன்றாய்ப் பலவா யுயிர்க்குயிராய்
ஆடும்,கருணைப் பரஞ்சோதி அருளைப்பெறுதற் கன்புநிலை
தேடும் பருவ மிதுகண்டீர், சேரவாரும் சகத் தீரே!

(3) நெஞ்சத்தி னூடே, நினைவாய் நினைவூடும்,
அஞ்சலென வாழுமென தாவித் துணைநீயே,
சஞ்சலமாற் றினையினிமேல் தாய்க்குபசா ரம்புகன்று
பஞ்சரிக்க, நானார், பதியே பராபரமே?

(4) "சிந்தையை அடக்கியே சும்மாவிருக்கின்ற திறமரிது"

தாந்தம் பெறவில்லை. தேக *தத்துவங்களால், மனம் உண்டாகிறதென்றும் சில அமெரிக்கர் கூறுவார்.

தாயுமானவர் மனோசாஸ்திரம், மிகவும் ஒழுங்கானதும், சுவல்பத்தில் அறிந்துகொள்ளக் கூடியதாயுமுள்ளது. மனிதர் முதலிய ஜீவர்களுக்கு சாக்கிரதம், சொர்ப்பனம், சுழுத்தி என்னும் சாதாரண அவஸ்தைகள் மூன்று என்றும் காணலாம். இத்துடன் அசாதாரணமாய் மூர்ச்சை, மரணம் என்னும் இரண்டு அவஸ்தைகள் உள. இதன்றியும், ஞானிகளுக்கு மாத்திரம் துரியம், துரியாதீதம், என்னும் இரண்டு அவஸ்தைகள் உள. இவ்வவஸ்தைகள் நிகழ்த்தும் கருவிகள் முப்பத்தைந்து. அவை நிகழும் முறையாவது, முதலில் சாக்கிரதாவஸ்தையில் ஜீவன், நெற்றியின்நடுவில் கொலுவிருந்து ஞானேந்திரியம் ஐந்து,† கன்மேந்திரியம் ஐந்து, ‡இவற்றின் விடயங்கள் பத்து, வாயுக்கள் பத்து அந்தக்கரணங்கள் நான்கு, இவற்றை தன் அங்கங்களாய் வகித்து நிற்கும்§. இரண்டாவது சொர்பனவஸ்தையில், புருடன,

---

* Psycho—physical parallellism. Jame's Psychology, McDougall's Physiological psychology முதலிய நூல்களில் காண்க. இவற்றை பீ. ஏ. பரீட்சைக்கு நான்காம் பிரிவில் ஓதுவார்கள்.

† ஞானேந்திரியங்கள் மெய், வாய், கண், மூக்கு, செவி.

‡ கன்மேந்திரியங்கள், வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபஸ்தம்.

§ சாக்கிரமா நுதலினிந் திரியம் பத்தும்,
சத்தாதி, வசனாதி, வாயு பத்தும்,
நீக்கமிலந் தக்கரணம், புருடனோடு,
நின்றதுமுப் பானைந்து நிலவும்; (a) கண்டத்
தாக்கியசொர்ப் பனமதனில் வாயு பத்தும்,
அடுத்தனசத் தாதி,வச னாதி யாக,
நோக்குகா ணம்,புருட னுடனே கூட,
நுவல்வரிரு பத்தைந்தாம், நுண்ணி யோரே.

அதாவதுஜீவன், கண்டஸ்தலத்திலே கொலுவிருக்கும். அக்காலத்தில், இந்திரியங்கள் பத்து மாத்திரம் ஒடுங்கியிருக்கும். அவை ஒடுங்கியும், அவற்றின் விஷயங்களான சப்த, பரிச, ரூப, ரச, கந்தங்களும் வசந, கமன, தான, விசர்க்க, ஆநந்தங்களும், தத்தம் தொழிலை நடத்தும் தசவாயுக்களாகிய பிராணன், அபாநன், சமாநன், உதாநன், வியாநன், நாகன், கூர்மன், கிருகரன், தனஞ்செயன் என்பன, ஜாக்கிரதத்தில் நடத்துவதுபோல் தமது தொழில்களை நடத்தும். அந்தக்கரணங்களாகிய மனம், *புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நான்கும் நின்று விளங்கும்; (a) ஆக சொர்ப்பனவஸ்தையின் கருவிகள் இருபத்தைந்தாம். மூன்றாவது, † சுழுத்தியாகிய சலனமற்ற நித்திரையில், தசவாயுக்களில் பிராணன் ஒன்றே உலவும். மற்றைய வாயுகளும், இந்திரியங்களும் அவற்றின் விடயங்களும் மனமும்புத்தியும் ஒடுங்க, புருடன் இருதயத்தில், சித்தத்துடன் பிராணவாயு நிகழ்ச்சியால் லயமடைந்திருப்பான். மனம், புத்தி, அந்த அவஸ்தையில் இலாததால் அவ்வவஸ்தையை விவரிக்க முடியாது. சித்தம், நித்திரை யின்பமாயிருந்ததா? அல்லது சுகமில்லையா? என்னும் அநுபவம் மாத்திரம் சாக்கிரதா அவஸ்தையில்

---

* "இமையளவு போதை,யொரு கற்பகா லம்பண்ணும்
இவ்வுலகம், எவ்வுலகமோ?"

† சுழுத்தியித யந்தன்னுள், பிராணன், சித்தம்
சொல்லரிய புருடனுடன், மூன்ற தாகும்.
வழுத்தியநா பியிற்றுரியம், பிராண னோடு
மன்னுபுரு டனும், கூட வயங்கா நிற்கும்.
அழுத்திடுமூ லந்தன்னில் துரியா தீதம்
அதனிடையே, புருடனென்றி யமரு ஞானம்
பழுத்திடும்பக் குவமறிவார். அவஸ்தை யைந்தின்
பாங்குபெறக் கருவி நிற்கும் பரிசுதானே.

நம்மைச் சொல்ல வைக்கிறது. இதை ஞானிகள் மூட சுழுத்தி என்பார். ஜீவசிருஷ்டியான உலக பாதை நீங்கியும், அஞ்ஞான இருள் நீங்காததாதலால், அச்சுழுத்தியின் சுகம் அறிவின்றி நிகழ்ந்து, பிறகு விடயங்களில் வந்து கலக்கும்.

அசாதாரணமாய் வரும் மூர்ச்சையென்னும் அவஸ்தை, சுழுத்திபோன்றதேனும், பிராணவாயும் கொஞ்சம் ஒடுங்குவதாலும், பிராணன் வசமாகும்வரையில் ஜீவனும்,சித்தமும் விடயங்களில் கலவா. பிராணவாயு, தானே சரிப்பட்டு வந்தாலும், அல்லது சிகிச்சைகளால் வழிப்பட்டாலும், மூர்ச்சை தெளியும். மரணாவஸ்தை அநுபவித்தவர்கள் மறுபடியும் வந்து விவரித்ததில்லை. அது, எவ்விதமோ தெரியாது.

ஞானிகள், ஞான ஆரம்பத்தின் அவஸ்தை, துரியமென்பர்; அந்தரங்கத்தில், உள்ளிருப்பன, அந்தக்கரணங்கள் முதல் யாவும் நானல்ல, நானல்ல, என்று கழித்து எஞ்சி நின்ற மனவாக்குக்கெடாத எங்குமாம் பொருளை அணுவுக்கணுவாக தரிசித்தலாம். * அணுவுக்கணுவாய் உள்ளே தரிசித்தவாறு அப்பொருளை புறத்தில், மஹத்துக்குமஹத் தாய் தரிசிப்பதற்கு* இது ஏதுவாகும். இந்த நான்காவது அவஸ்தையான துரியத்தில், ஜீவன்,நாபியில்

---

* அணுவுக்கணு வென்பது, ஒரு அணு உலகமாயின் அதன் அணு எவ்வளவில் ஒரு பாகமோ அவ்வளவு.

* ஆசைநிக ளத்தினை, நிர்த்தூளி படவுதறி
யாங்கார மூலையேயெற் றி,
அத்துவித மதமாகி, மதமாறு மாறாக
அங்கையினில் விலாழியாக் கி,
பாசவிருள் தன்னிழ லெனக்களித் தார்த்துமேற்
பார்த்துப்ப ரந்தமன தைப்
பாரித்த கவளமாய்ப் பூரிக்க வுண்டுமுக
படாமன்ன மாணயறு றித்

தனியாய் பிராணவாயுடன் நிலைத்து அறிவுமயமாய் நிற்கும். இதன்இன்பம், சுழுத்தி போன்ற நிற்சலமான இன்பமாயினும், அறிவால் நிறைந்ததால், இஞ்ஞான யோகத்தின்கண், வேண்டுமளவு சமாதியிருத்தலும், பிறகு உலக வியாபகமாயிருந்து அக்காரியங்கள் முடிந்த பின்னர், வேண்டும்தோன்றும் நின்மல இன்பம் அனுபவிப்பதுமாய், ஜீவன்முத்தர்கள் காலம்கழிப்பார். இதையே*

---

தேசுபெற, நீவைத்த சின்முத்தி ராங்குச
செங்கைக்கு ளேயடங் கிச்
சின்மயா னந்தசுக வெள்ளம்ப டிந்துநின்
திருவருட் பூர்த்தியா ன
வாசமுறு சற்கார மீதென்னை, யொருஞான
மத்தகஜ மெனவளர்த் தாய்,
மந்தரகுரு வே,யோக தந்திரகுரு வே,மூலன்
மரபின்வரு மௌனகுரு வே !

* கண்ணார நீர்மல்கி யுள்ளநெக் குருகாத
கள்ளனே னானுமே,
கைகுவித் தாடியும், பாடியும், விடாமலே
கண்பனித் தாரைகாட் டி,
அண்ணா!ப ரஞ்சோதி யப்பா!வு னக்கடிமை
யானெனவு மேலெழுந் த
அன்பாகி, நாடகந டித்ததோ குறைவில்லை;
அகிலமும் சிறிதறியு மேல்
தண்ணாரு நின்னதரு ளறியாத தல்லவே,
சற்றேனு மினிதிரங் கிச்
சாசுவித முத்திநிலை ஈதென்று ணர்த்தினை,
சகசநிலை தந்துவே றொன்
றெண்ணாம லுள்ளபடி சும்மா யிருக்கவே,
யேழையேற் கருள்செய்கண் டாய்,
இகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி,
எங்குநிறை கின்றபொரு ளே!

[இதன் பக்கத்துப்பாட்டாகிய "காகமானவை கோடி கூடி நின்றாலும்" என்பதில் "சகச நிஷ்டைக்கும், என் சிந்தைக்கும் வெகுதூரம்" என்றார்; அதனால் சொரூபநிஷ்டை, சித்தியாயிற்றென விளங்கும்]

சொரூபநிஷ்டையெனப்படும். சொரூப நிஷ்டை கூடிக் கூடி, அகமுகத்தில் கண்டதைப் புறத்தில் கண்டு களிப்பதே, சகஜ நிஷ்டையாம்.* இக்காலங்களில், ஞானி, கன்ம காரியங்களைப் பூர்த்திசெய்து,மாயாசம்பந்தமற்று†,

---

* உன்னிலையு, மென்னிலையு, மொருநிலையெனக்கிடந்
துளறிடும வத்தையாகி,
உருவுதான் காட்டாத ஆணவமும், ஒளிகண்டொ
ளிக்கின்ற இருளென்னவே,
தன்னிலைமை காட்டாதொருங்கவிரு வினையினுற்
றுவுசுக துக்கவேலை
தட்டழிய, முற்றுமில் லாமாயை யதனுற்ற
டித்தகில பேதமான
முன்னிலை யொழிந்திட, வகண்டிதாகாரமாய்
மூதறிவு மேலுதிப்ப,
முன்பினொடு கீழ்மேல்நடுப்பக்க மென்னுமல்,
முற்றுமானந்தநிறைவே!
என்னிலைமை யாய்நிற்க, இயல்புகூ ரருள்வடிவம்
எந்நாளும் வாழி,வாழி!
இகபர மிரண்டினிலு, முயிரினுக் குயிராகி,
எங்குநிறை கின்றபொருளே!

† கூடுதலு டன்பிரித லற்று,நிர்த் தொந்தமாய்க்
குவிதலுடன் விரிதலற்றுக்,
குணமற்று, வரவினொடு போக்கற்று, நிலையான
குறியற்று, மலமுமற்று,
நாடுதலு மற்று,மேல் கீழ்நடுப் பக்கமென
நண்ணுதலு மற்று,விந்து
நாதமற் றைவகைப் பூதபே தமுமற்று,
ஞாதுருவின் ஞானமற்று,
வாடுதலு மற்று,மேல் ஒன்றற்றி ரண்டற்று,
வாக்கற்று, மனமுமற்று,
மன்னுபரி பூரணசு கவாரி தன்னிலே
வாய்மடுத் துண்டவசமாய்த்
தேடுதலு மற்றவிட நிலையென்ற மௌனியே!
சித்தாந்த முத்திமுதலே,
சிரகிரி விளங்கவரு தட்சணா மூர்த்தியே!
சின்மயா னந்தகுருவே!

நிஷ்டையில் கண்ட பொருளுடன், அபேதமாய் தனிச் சின்மாத்திரமாய் விளங்க கூடும் சுகாதீத நிலைக்கு வழி நோக்குவன்.

துரியாதீதம் என்பது ஐந்தாம் அவஸ்தை, இதில் பிராணனும் சம்பந்தமற, மாயாசம்பந்தம் பூரணமாய் நீங்கிய ஜீவன், கூடஸ்த சைதன்யமாய் மூலஸ்தானத்தில் தனித்து நிற்கும். இவ்வவஸ்தையினின்றும் ஞானி உலகத்திற்கு மீள்வதில்லை. இதன் அனுபவம், துரிய நிலை அநுபவத்தோர், ஞானக் கருவியால் நோக்கி, வான சாஸ்திரிகள் சந்திரமண்டலம் முதலிய மண்டலங்கள் கூறுவதுபோல, நமக்கு அவர் சுவாநுபவ* அநுமானப் பிரமாணங்களால் வெளியிட்டிருக்கின்றனர்.

"தானான தன்மையமே யல்லா லொன்றைத்
தலையெடுக்க வொட்டாது, தலைப்பட் டாங்கே
போனாலும், கற்பூர தீபம் போல
போயொளிப்ப தல்லாது, புலன்வே றின்றாம்"

என்றனர் தாயுமானவர்.

---

* பாராதி அண்டங்க ளத்தனையும் வைக்கின்ற
பரவெளியி னுண்மைகாட் டி,
பற்றுமன வெளிகாட்டி, மனவெளியி னிற்றோய்ந்த
பாவியேன் பரிசுகாட் டி,
தாரான மாய்திறக, நிற்சிந்தை காட்டிச்ச
தாகால நிஷ்டை யெனவே,
சகசநிலை காட்டினை, சுகாதீத நிலையந்த
னைக்காட்ட நாள்செல்லு மோ?
காரார வெண்ணரு மனந்தகோ டிகணின்று
காலூன்றி, மழைபொழிதல் போல்
கால்வீசி, மின்னிப்ப டார்ந்துவர வெளியெலாம்
கம்மியா னந்தவெள் ளம்
சோராது பொழியவே, கருணையின்மு ழங்கியே
தொண்டரைக் கூவுமுகி லே!
சுத்தநிற் குணமான பரதெய்வ மே! பரஞ்
சோதியே! சுகவாரி யே!

ஆகையால் தாயுமானவர் மனோசாஸ்திரம், பண்டிதபாமர ஜனங்களுக்கும் தெரிவதாய், உடற்கூற்று சாஸ்திர வாய்பாடுகளுக்கு முரணாகாமல், தெளிவாய்ச் சுருதி, யுக்தி, அநுபவத்திற்கு ஏற்பதாயிருக்கின்றது. தாயுமானவர் குறித்துள்ள மனோசாஸ்திர ரீதியாய், மேல்நாட்டு தத்துவ சாஸ்திரிகள் ஆராயப்பழகுவாராயின், அவ்விடத்திலுண்டாகும் பலவித தடுமாற்றங்களும் ஒழிவதன்றி, யாவரும் சச்சிதானந்த வாழ்க்கை பெறுவார்கள்.

வாழி சோபனம், வாழிநல் லன்பர்கள்,
சூழ வந்தருள் தோற்றமும், சோபனம்;
ஆழி போலருள், ஐயன் மௌனத்தால்,
ஏழை யேன்பெற்ற இன்பமும், சோபனம்.

முற்றிற்று.